

# இனிப்புக் கதைகள்

த.அஜந்தகுமார்

# இனிப்புக் கதைகள்

த.அஜந்தகுமார்

இனிப்புக் கதைகள்/ த.அஜந்தகுமார் /வதனகிரி, துன்னாலைகிழக்கு, யாழ்ப்பாணம்/ முதற்பதிப்பு: மார்கழி 2019/ ©வதனரேகா அஜந்தகுமார்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 60/ விலை: 200.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி./ தொலைபேசி:0774682488

Innipuk Kathaikal / T.Ajanthakumar/ Vathanakiri, Thunnalai East, Jaffna/ First Edition: December 2019/ © Vathanareka Ajanthakumar/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 60 / Price: 200.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-03-0

ஜீவநதி வெளியீடு – 136

# நிகழ்விய வெளிப்பாட்டின் பிரதிபலிப்பு எழுத்தாக நாட்குறிப்பு எழுதலின் சுயசரிதைப் பாணி:

அஜந்தகுமாரின் இனிப்புக் கதைகளை முன்வைத்த ஓர் அடையாளப்படுத்தல்

அஜந்தகுமார் சிறுகதை எழுத்தாளர், கவிஞர், தமிழியல் ஆய்வாளர், சிறுசஞ்சிகை ஆசிரியர், வசீகரிக்கும் பேச்சாளர் என்று பல்வேறு பரிமாணங்களில் அறியப்பட்டவர். படைப்பாக்கத்துறையிலும் ஆய்வுத்துறையிலும் தளராது தன் ஈடுபாட்டைக் காட்டிவருபவர். நவீன இலக்கியப் பயிற்சியும் நவீன இலக்கியங்கள் பற்றிய ஆய்வூக்கமும் மிஞ்சியவர். படைப்பாக்கத்துக்கான பிராந்திய மற்றும் தேசிய விருதுகளைப் பெற்றவர். குறிப்பிடத்தக்க ஆய்வு மாநாடுகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து தன்னை ஓர் ஆய்வாளனாக நிலைநிறுத்தியவர். ஒரு சோம்பேறியின் கடல், தனித்துத் தெரியும் திசை, அப்பாவின் சித்திரங்கள், நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன், படைப்பின் கதவுகள் போன்ற படைப்பாக்க மற்றும் ஆய்வு நூல்களைத் தந்தவர்.

இனிப்புக்கதைகள் அஜந்தகுமாரின் வித்தியாசமான படைப்பு. இதற்கு முன்னரும் அவரது தந்தையாரின் நினைவேந்தி வெளியிடப்பட்ட அப்பாவின் சித்திரங்கள் எனும் நூலும் வித்தியாசமாகச் செதுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் வெளி வந்த “புதுவிதி” பத்திரிகையில் தொடராக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. குறுங்கதைகள், குட்டிக்கதைகள், கடுகுக்கதைகள் என்றெல்லாம் பெயரிடப்பட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் கதைகளில் இனிப்புக்கதைகளை எதற்குள் அடக்கலாம்? இந்தக் கேள்விக்கான விடையைத் தேடி அஜந்த குமாரின் இனிப்புக்கதைகளை அடையாளப்படுத்தவும், நமது இலக்கியத் தேட்டத்தில் இவ்வாறான கதைகளுக்கான இருப்பிடத்தை

ஒரு கோட்பாட்டுப் பின்புலத்துடன் தீர்மானிக்கவும் இந்த முன்னுரை விழைகின்றது.

ஜப்பானியர்களின் வாழ்வு முறையில் மினிமலிசம்-minimalism எனும் கருத்தாக்கம் முக்கியம் பெற்றுள்ளது. செட்டாகவும் சீராகவும் இருப்பது வாழ்வில் சிக்கலையும் விரயங்களையும் குறைக்கும் என்பது அந்தக் கருத்தாக்கத்தின் உள்ளுறைந்த நோக்காகும். அது படைப்பாக்கத்திலும் செல்வாக்குப் பெற்றுள்ளது. எல்லாவற்றையும் "செட்டாக"(மினிமல்-minimal) செய்யும்போது குறுகத்தறித்த குறளாய் "சுருக்கென்று" மனவாழைப் பழத்தில் ஊசியாய் ஏறிவிடுகின்றது. காப்பியங்கள், நாவல்கள் வளர்ந்த அதே இலக்கிய நெறியில்தான் தனிப்பாடல்களும் குறுங்கதைகளும் தோன்றின. குறுங்கதை கூறும் மரபில் அஜந்தகுமாரின் இனிப்புக்கதைகள் இன்னொரு பரிமாணத்தையுடையது. சாதாரண மக்களிடத்தில் சலிப்பின்றிச் சில செய்திகளைப் பத்திரிகை வாயிலாகக் கொண்டுசேர்க்க இவை தகுந்த வடிவங்களாக அமைந்தனபோலும்!

நாளாந்த வாழ்வின் அனுபவங்களை எமது வாழ்வுலகத்தின் அனுபவமாக கட்டமைப்பது என்பது அர்த்தம் பற்றிய விழிப்புணர்வைக் (awareness of meaning) கட்டமைத்து வாழ்வனுபவத்தைக் கட்டமைப்பதா கின்றது. வாழ்வனுபவங்களை எண்ணக்கருவாக்கம் செய்வதைக் காட்டிலும் அவற்றை உசாவுதலே(investigating) வாழ்வனுபவங்களைக் கட்டமைப்பதற்கு அவசியமானதாகின்றது. உண்மையில் கட்டமைத்தல் என்ற சொற்பிரயோகமே இங்கு அவசியமற்றதாகின்றது. கட்டமைத்தல் என்பதற்குப் பதிலாக "பிரதிபலித்தல்"(reflexive) என்ற சொற்பிரயோகமே பொருத்தமாகின்றது. ஏனெனில் படைப்பாக்கம் ஒரு சுய வெளிப்பாட்டு ஊடகமாக அமைகின்றபோது அது "பிரதிபலிப்பு எழுத்து"(reflexive writing) என்று ஆகின்றது. பிரதிபலிப்பு எழுத்துக்கள் "நிகழ்விய வெளிப்பாடுகள்" (phenomenological expressions) ஆகின்றன. நிகழ்வியம் அல்லது தோற்றப்பாட்டியம் என்பது படைப்பாளியின் "புலக்காட்சித்துவம்" (perceptiveness) மற்றும் உள்ளூரத் தூண்டும் உணர்வு(intuitive sensitivity) சம்பந்தமானது. தோற்றப்பாடு ஒன்றிற்கான படைப்பாளியின் புலக் காட்சித்துவம் மற்றும் உள்ளூரத் தூண்டும் உணர்வு என்பது அனுபவங்களின் பிழிசாற்றினைத்(essences of experiences) தருகின்றது. இதனை ஆய்வு நோக்கில் study of essence என்று குறிப்பிடுவர். தோற்றப்பாடுகளை இனிப்புக்கதைகளாக எழுதுவதால் அஜந்தகுமார் பிரதிபலிப்பு எழுத்துமுறை ஒன்றினைத் தனது படைப்பாக்க வெளிப்பாட்டு முறையாகக் கொள்கின்றார் எனலாம்.

நிகழ்விய வெளிப்பாடுகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படு கின்றன. தோற்றப்பாட்டியல் நாட்குறிப்பு(phenomenological diary), சுய-இனவரைவியல்(auto-ethnography) என்பன குறிப்பிடத்தக்க வடிவங்கள். இவை

நாளாந்த வாழ்வனுபவங்களை நாட்குறிப்புப் போல அல்லது சுய சரிதை போல வெளிப்படுத்துகின்றன. இந்த எழுதுமுறையை நாட்குறிப்பு எழுதலின் சுயசரிதைப் பாணி(auto-biographic style of diary writing) என்று குறிப்பிடலாம். ஆயினும், இவை சுயசரிதைகள் அல்ல. சுயசரிதை ஒன்றினால் பெறமுடியாத இலக்கியப் பெறுமானத்தை இவை பெற்றுவிடுகின்றன.

புனைவாக்கத்தின் உளவியல் பரிமாணத்தை விளக்கும் விமர்சன நெறியொன்று மெய்யியல் தன்மையுடன் வளர்ந்து வந்துள்ளது. இது ஹுசேர்ல்(Husserl), பிரண்டானோ(Brentano) முதலானவர்களால் தோற்றப் பாட்டியல் மெய்யியல்(phenomenological philosophy) எனும் துறையாக வளர்த்தெடுக்கப்பட்ட கருத்தாக்கங்களை உள்வாங்கி வளர்ந்தது. இது விளக்கமளித்தல் உளவியலின்(descriptive psychology) விருத்திக்கு அடிப்படையானது. இவற்றுக்கெல்லாம் அடித்தளமாக The phenomenology of Spirit எனும் ஹெகலின்(Hegel) தத்துவார்த்த வேலையே அமைந்தது. அறிகை உளவியலின்(cognitive psychology) அடிப்படையாகவும் இதுவே அமைந்தது. முதலாம் நபரின் அனுபவத்தின் வழியே கட்டமைக்கப்படும் நனவுநிலையின் பிரதிபலிப்பை புரிந்துகொள்ள முற்படுவதே படைப்பாக்கத்தின் மெய்யியல் என்பதை இந்த அணுகுமுறை தனது மையநிலைப்பாடாகக் கொண்டது. இதற்கான முறையியலாகவே விளக்கமளித்தல் உளவியல் பகுப்பாய்வு (interpretive psychological analysis)அமைந்தது. நாட்குறிப்பு எழுதலின் சுயசரிதைப் பாணியானது அதற்கான வாய்ப்பான வடிவமாகின்றது. ஏனெனில், நாளாந்த வாழ்வனுபவங்களை இலக்கியப் பண்புடன் எழுதுவதால் படைப்பாக்கம் வாழ்வின் அர்த்தங்களை அவை நிகழும் தளத்தில் வைத்தே புரிந்து கொள்வதற்கு அல்லது புரியவைப்பதற்கான வழி முறையாகிவிடுகின்றது.

நாட்குறிப்பு எழுதலின் சுயசரிதைப் பாணியிலமைந்த இந்த இனிப்புக் கதைகள் மேற்குறித்த பிரமாணங்களை உள்வாங்கி இன்னும் கனதிபெற வேண்டியவையெனினும் அதற்கான அடிப்படைப் பண்புகள் பலவற்றைக் கொண்டமைந்தவை. அவற்றில்:

- இவை அனுபவத் தோற்றப்பாடுகளின் நாட்குறிப்புகளாகின்றன
- நினைந்துருகல் மற்றும் நினைவில் தோய்தலுக்கான வழியைத் திறக்கின்றது
- படிப்பவர் ஒவ்வொருவரையும் தன் அனுபவங்களுடன் பொருத்திப் பார்க்க வைக்கும் நெருக்கத்தைத் தருகின்றது
- மறைந்துபோன வாழ்வின் வாளிப்பான அம்சங்களைப் பதிவாக்குகின்றது
- நெருக்கடிகளின் உளவியல் பரிமாணங்களை படைப்பாளியின் தன் விசாரணையாகத் தருகின்றது
- கதையோடு கதையாக வாழ்வின் மெய்மையைத் தேடுகின்றது

- மொழியின் எளிமையால் சாதாரணர்களின் வாழ்வுக்கு மிக நெருங்கி வருகின்றது
- சுயசரிதைப் பண்பு கடந்தும் கலந்தும் நிற்கும் தோற்றப்பாட்டியல் நாட்குறிப்புப் பண்பு பெறுகின்றது
- ஒவ்வொரு தலைப்பிலும் குறிப்பிடப்படும் மூன்று சமனான தோற்றப்பாடுகளுக்கும் சேர்த்து சாராம்ச-பிளிசாறான- அர்த்த மளிக்கும் "ஈ" எனும் பகுதி தரும் தோற்றப்பாட்டியல் மெய்மைத்தனம்

முதலானவை குறிப்பிடத்தக்கவை. ஆயினும், இவை குறித்த பிரக்ஞை பூர்வமான கரிசனை இந்தவகைப் படைப்பாக்கத்தின் பெறுமானத்தை மேலும் உயர்த்தும்.

அஜந்தகுமாரும் தான் கையாளும் நாட்குறிப்பு எழுதலின் சுய சரிதைப் பாணியின் மூலமாக தோற்றப்பாடுகளை அல்லது நாளாந்த வாழ் வனுபவங்களை இலக்கிய சுவாரஸ்யத்தோடு பதிவாக்கும் அதேவேளை தோற்றப்பாடுகளுக்கான மெய்மைகாணும் முயற்சியில் இறங்கியுள்ளார். அஜந்தகுமாரைப் பொறுத்தவரை இது தற்செயலானதாக அல்லது நினையாப் பிரகாரம் நிகழ்ந்ததாகக்கூட இருக்கலாம். எவ்வாறாயினும் இந்த எழுது முறை திட்டமிடப்பட்டுச் செய்யப்படுமானால் இதன் இலக்கிய உளவியல் மற்றும் மெய்யியல் பெறுமானம் உயர்ந்ததாகும். இந்தப் பாணியிலான எழுத்துக்கள் அதன் பயனுணர்ந்து எங்கள் இலக்கியப் புலத்தில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

**இ.இராஜேஸ்கண்ணன்**
**தலைவர்**
**சமூகவியல் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# என்னுரை

எப்பொழுதாவதுதான் எழுதவேண்டும் என்ற எண்ணம் உருவாகும். அப்படிப்பட்ட ஒரு காலத்தில் எழுதப்பட்ட இந்த எழுத்துகளை எந்த வடிவத்தில் சேர்ப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் இவை அனுபவங்களும் சிறு புனைவுகளும் இணைந்த எளிமையான மொழிநடையில் ஒருவகை வித்தியாசமான வடிவமாக உருப்பெற்றுள்ளதை மீண்டும் வாசித்துப் பார்க்கும் போதும் உணர்கின்றேன். புதுவிதி வார இதழ் யாழ்ப்பாணத்தில் வெளிவரத் தொடங்கிய பொழுது நண்பர் த.பிரபாகரன் எனக்குத் தந்த சுதந்திரத்தின் விளைவே இவ் எழுத்து முயற்சிகள். நாலும் கலந்துனக்கு நான் தருவேன் என்று ஔவை கூறியதே இதன் அடிப்படை. மீண்டும் திரும்பிவரமுடியாத காலங் களுக்குள்ளும் நினைவுகளுக்குள்ளும் நான் அலைந்தும் அமிழ்ந்தும் இருந்தேன். ஒவ்வொரு வாரமும் அவசரத்தில் எழுதினாலும் எனக்கு ஓர் ஆத்ம திருப்தி ஏற்பட்டது உண்மை. பல நண்பர்கள் வித்தியாசமான முயற்சி எனப் பாராட்டினார்கள். எனது ஆசிரியர்களான குப்பிழான் ஐ.சண்முகனும் இ.இராஜேஸ்கண்ணனும் எனது இம்முயற்சியை இங்கு பாராட்டியுள்ளமையை எனக்குக் கிடைத்த பேறாகக் கருதுகின்றேன்.

எனக்குக்கிடைத்த அனுபவங்களை ஓர் நேர்கோட்டில் இணைத்துப் பார்த்தமையும் என் வாழ்வை நானே திரும்பிப்பார்க்கவும் கிடைத்த இச்சந்தர்ப் பத்தை இறையருளின் விளைவு என்பேன். எனது முதல் வாசகியாய் விமர்சகி யாய் விளங்கும் எனது துணைவியாருக்கு என் அன்பை எவ்வாறு சொல்லி முடிப்பேன்? உடுவில் அரவிந்தன் முதலான எழுத்தாள நண்பர்கள் அடிக்கடி கருத்து களைப் பகிர்ந்து கொள்ளும் போது ஏற்பட்ட உற்சாகத்திற்கு இணையில்லை. நண்பர் பரணீதரன் இந்த நூலுருவாக்கத்தில் உற்சாகத்துடன் ஒத்துழைத்தார். நண்பருக்கு என் நன்றி. செல்லக்குட்டி கணேசன் அவர்கள் செவ்வை பார்ப்பதில் உதவினார். நான் அடைந்த அனுபவங்களுக்குக் காரணமான என் பெற்றோர்க்கும், சகோதரிகளுக்கும், மனைவிக்கும், என் மகள் ஆத்மிகாவுக்கும் நான் பெருங்கடப்பாடு உடையவன். இந்த எழுத்துகளைப் பற்றிய உங்கள் கருத்துகளை ஆவலோடு எதிர்பார்க்கின்றேன்.

**அன்புடன்**

**த.அஜந்தகுமார்**

**0774683488**

tajanthakumar@gmail.com

## நன்றி

த.பிரபாகரன்
க.பரணீதரன்
செல்லக்குட்டி கணேசன்
அ.வதனரேகா
புதுவிதி

# வரலாறு

**அ)**

*மழை அப்போதுதான் விட்டிருந்தது. நான் அந்த வீட்டின் முன்னால் நின்று கூப்பிட்டபோது அந்தச் சிறுமி தான் ஓடோடி வந்தாள். தலை கலைந்திருந்தது. தலை மயிரில் ஆங்காங்கு மழைத்துளிகள் ஒட்டியிருந்தன. மெதுவாய் என்ன என்பது போலச் சிரித்தாள்.*

*“கந்தசாமி வீடு இதுதானே? என்றேன்.*

*“ஓம்” என்றாள்.*

*மேலும் உறுதிப்படுத்துவதற்காக கேட்டேன்.*

*“உங்கள் அப்பப்பாவின் பெயர் என்ன?”*

*தெரியாது என்று மண்டிக்கொண்டு கூறினாள்.*

*“என்ன தெரியாதோ”*

*கடுமையாக வெட்கப்பட்டாள்.*

*வீட்டாரிடம் விபரங்களை எழுதிக்கொண்டு திரும்பிச் செல்ல முற்பட்டபோது அவர்களின் கதவு நிலையில் வெண் கட்டியால் எழுதப்பட்டிருந்த சொற்கள் என் கண்ணை ஈர்த்தது.*

*“இளைய தளபதி விஜய்”*

*இதை யார் எழுதியது? என்று மெதுவாகக் கேட்டேன்.*

*அந்தச் சிறுமி, நான்தான் என்றாள்.*

**ஆ)**

*தமிழ் இலக்கிய வரலாறு என்ற பாடத்தை முதன்முதல் கற்பிக்க ஆரம்பிக்கும் போது இலக்கியம் வரலாறு என்ப வற்றை விளக்குவதோடு உதாரணங்களையும் எடுத்துக்*

காட்டுவது வழக்கம். ஒரு முறை மாணவர்களைக் கேட்டேன்.

“உங்கள் வரலாறு உங்களுக்குத் தெரியுமா?“

ஓம் என்பதைப் போன்ற பாவனையில் மாணவர்கள் இருந்தார்கள்.

அப்போது நான் கேட்டேன்.

“உங்கள் அம்மா அப்பாவின் பிறந்தநாள் எப்போது என்று தெரிந்தவர்கள் கையை உயர்த்துங்கள் பார்ப்போம்?“

எண்பது மாணவர்களைக் கொண்ட அந்த வகுப்பறையில் வெறும் பத்து மாணவர்களே கையை உயர்த்தினார்கள். என்பதை நீங்கள் நம்புவீர்களா?

இதுவே சினிமா நடிகர், நடிகைகளின் பிறந்தநாள் பற்றி நான் கேட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று உங்களுக்குச் சொல்லாமலே விளங்கியிருக்கும்.

**இ)**

சங்ககாலப் புறப்பொருள் மரபில் அன்றைய நடுகல்மரபு பற்றி கூறத்தொடங்கினேன். உங்களுக்கு நடுகல் வழிபாடு பற்றி ஏதும் தெரியுமா? நாம் கல்லறைகளை அமைத்து பூக்களை வைத்துக் கண்ணீர் சொரிந்த கதையை அறிந்ததுண்டா? என்றேன். சிலர் மத்தியில் சலசலப்பு, மற்றப்படி தெரியாத மௌனமே முழித் திருந்தது. அந்தப் பதினேழு வயது மாணவர்களுக்கு யுத்தம் முடியும் போது பத்து வயது. இங்கு கல்லறைகள் இருக்கும்போது இன்னும் சின்ன வயது. என்றாலும் இதைக் காரணம் காட்டி நடந்தவற்றை மறந்து மௌனித்துவிட முடியுமா? என்று திகைத்துத்தான் போனேன்.

**ஈ)**

இன்றைய வாழ்வு நாளைய வரலாறே. செய்தியாகவும் வாழ்வாகவும் கூட இல்லாத, வரலாற்றின் உணர்வைத் தொலைத்த “வளர்ப்புகள்” ஆகிக்கொண்டிருக்கிறோமா? என்ற பயத்தை சில “பதச்சோறுகள்” ஏற்படுத்துகின்றன. இந்தச் சோறுகளை அழுத்திப் பார்க்கும்போது வழுக்கி, கழிவு வாய்க்காலில் விழுகின்றன. எந்த வள்ளுவர் இனிச் சோற்றுக்கருகில் ஊசியோடும் நீரோடும் காத்திருக்கப் போகின்றார்?

வரலாறு இல்லாமலும் வாழ்வோம்…!

# தூங்கா மனம்

**அ)**

*மாட்டுத் தாவணி பஸ் நிலையத்தில் அந்த நடுச் சாமத்தில் வந்து இறங்கினோம்.அப்பொழுதுதான் காலைப் பொழுது என்பது போல் வெகு உற்சாகமாக இருந்தது மதுரை மாநகரம் மதுரையின் இன்னொரு பெயரான தூங்கா நகரம் என்பதற்கான அர்த்தம் அப்பொழுதுதான் தெளிவாகப் புரிந்தது. எனினும் கள்வர்களின் தொல்லை பற்றியும் சிலர் பயமுறுத்தி இருந்ததால் பைகளை இறுக்க அணைத்தபடி நடந்தோம். சாதாரண அறையில் தங்குவது இல்லையென்று முடிவெடுத்து தூரத்தில் பார்க்கும் போது டிஜிற்றல் பெயர் ஓடிக் கொண்டிருக்கும் வசதியான ஒரு ஹோட்டலில் அறை யெடுத்து நிற்போம் என்று தீர்மானித்தோம். ஒரு ஹோட்டலை நோக்கி எங்கள் கால்கள் விரையத் தொடங்கின.*

*வாகனங்களின் இரைச்சலை விட மனதில் இரைச்சல் அதிகமாக இருந்தது. நாளை காலையிலேயே நாங்கள் சென்று விடுவோம் என்பதை வரவேற்பிற்கு நின்றவருக்கு எடுத்துக் கூறிப் பதிவினை நிறைவு செய்ய, திறப்பொன்றுடன் எங்களுக்கு முன்னால் ஒருத்தர் சென்று கொண்டிருந்தார். அவர் அறையைத் திறந்து காட்டினார். இரண்டு கட்டில்கள், ஒரு சின்ன மேசை, ரீ.வி எல்லாமே இருந்தன. நுளம்புத் திரிக்குப் பதிலாக* Good night *ஐத் தந்து பிளக்கில் போடுமாறு கூறிவிட்டுச் சென்றார். ரீ.வியை போட்டு விட்டோம்.சன் நியூஸ் போய்க் கொண்டிருந்தது. டெங்கு பற்றிய செய்தியும் போய்க் கொண்டிருந்தது.* Goodnight *போட்டு விட்டேன். ஜன்னலைத் திறந்து பார்த்தேன். பெரிய அந்தக் ஹோட்டலின் பின்புறம் முழுவதும் பற்றையாக இருந்தது. ஜன்னலை மூடிவிட்டு நானும் நண்பரும் படுத்தோம். என்னை அறியாமல்*

தூக்கம் கண்களைத் தழுவியது. ஆனால் சிறிது நேரத்தால் நித்திரை கலைந்தது. ஒரே நுளம்பு. போர்த்திப் பார்த்தேன். சரிவரவில்லை. நண்பரைப் பார்த்தேன். அவரும் சொறிந்து கொண்டே இருந்தார். கடியும் சொறியுமாய் எப்ப விடிந்தது. என்று தெரியாமலே் விடிந்து விட்டது. கதவு தட்டிக் கேட்டது. இரவு கூட்டிவந்து விட்டவர் நின்றார். "என்ன அண்ண ஒரே நுளம்பு" என்று சொல்லத் தொடங்க, "ஐயோ ஸாரி சார் ! அதைத்தான் சொல்ல வந்தனான், குட்நைட்டுக்குள் "றீபிளை" வைக்க மறந்து போனன். ஸாரி சார்! ஸாரி என்றான். அவன் சொன்ன ஸாரி இரவு முழுவதுமான சொறியை மாற்றிவிடவும் தூக்கத்தை தந்து விடவுமா போகிறது???

தூங்காநகரம் எங்களுக்கும் தூங்கா நகரம் என்பதை நிரூபித்துக் கம்பீரமாக நின்றது.

**ஆ)**

எனது கால்களின் கீழ் பூனையின் வயிற்றுப் பகுதி நசிபட அது வாயைத் திறந்து பெரிதாகக் கத்தியது. அதன் கண்கள் மிகப் பயங்கர ஒளியை வீசின. கால் அமத்தலில் இருந்து விடுபட்டுக் கொண்டு அது என் முகத்தை நோக்கி ஒரு புலியைப் போல் பாய்ந்தது. ஐயோ!

என்முகமெல்லாம் இரத்தம் வழிவது போல் இருந்தது. இரண்டு கையாலும் துடைத்தேன். இரத்தம் போலப் பிசுபிசுக்க என் நெஞ்சமெல்லாம் துடித்தது. நான் ஒரு பூனையின் வயிற்றுக்குள் இருப்பது போன்ற பிரமை சூழ்ன்றது. கட்டிலில் இருந்து கீழே இறங்கினேன்.

"டேய் டேய் என்ர கால்றா" எண்ட சத்தம். அதன் பிறகு தான் எனக்கு விளங்கியது அது கனவு. அந்த இரவை அன்றைய கனவு குலைத்து போட்டது. அன்றுடன் அந்த அறையில் இருந்து கட்டில் விடைபெற்றுக் கொண்டது.

அன்று என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. ஒரு பூனையைப் போல் இரவு முழுவதும் நண்பர்களின் கால்களை மாறி மாறி மிதித்து பேச்சு வாங்கிக் கொண்டு நடந்து கொண்டிருந்தேன்.!

**இ)**

நிலத்தில் படுத்திருந்தேன். திடீரென ஒரு சுணைப்பு. கைகள் தாமாகவே தொடையை வேகமாகச் சொறியத் தொடங்கின. சொறிந்த இடங்கள் தடிப்பதை உணர்ந்தேன். திடீரெனத் துள்ளி எழுந்தேன். கட்டியிருந்த சாறத்தை உதறினேன். சிறிய மயிர்க் கொட்டி ஒன்றைக் கண்டதும் மனம் துணுக்குற்றது.

கதவைத் திறந்து ஓடிச்சென்று கிளுவம் தடியொன்றை முறித்து அதன் இலைகளை உருவி கடித்த, தடித்த இடங்களில் எல்லாம் தேய்க்கத் தொடங்கினேன். தேய்த்து முடித்ததும் இன்னும் சொறியும் வேதனையும் அதிகரிப்பது போல் உணர்ந்தேன். அம்மாவைத் தட்டியெழுப்பாமல், சுடுசாம்பல் பூசினால் நல்லது என்று எப்பவோ அம்மாவின்ரை வாயால கேட்டது ஞாபகத்திற்கு வர, குசினிக்கு ஓடிப் போய் அடுப்படிச் சாம்பலைத் தொட்டுப் பார்த்தேன். மெல்லிய சூடு இருந்தது. அதை எடுத்துத் தேய்க்கத் தொடங்கினேன். தேய்க்கத் தேய்க்கச் சுகமாகவே இருந்தது. நிற்பாட்டியதும் சொறிந்த இடங்களில் மெலிதாக ஏற்பட்ட காயங்கள் சாம்பலில் இன்னும் கொதிப்பதை உணர்ந்தேன். ஒரே வழி, குளிப்புத்தான் என்று முடிவெடுத்து தொட்டித் தண்ணியை அள்ளி வார்க்கத் தொடங்கினேன். சுகமாகத் தான் இருந்தது. குளித்து முகத்தைத் துடைத்துவிட்டு நேரத்தைப்பார்த்தேன்.

இரவு 1.40

ஆனால் இப்பொழுது எங்கிருந்தோ ஓர் உற்சாகம் வந்திருந்தது. எதையாவது எழுதவேண்டும் போல் மனமும் கையும் பரபரத்தன. நெடுநாளாக எழுத இருந்த சிறுகதை ஒன்று என்னை அறியாத ஒரு வேகத்துடன் தாள்களில் ஓடத் தொடங்கியது.

ஈ)

"தூக்கம் என்பது ஒரு விழிப்பு நிலை" என்கிறது பரந்தாமனின் பள்ளி கொள்ளும் தோற்றம். விழிப்பு நிலை கூட சிலருக்குத் தூக்கநிலை தான். தூங்குதல் என்றால் காலம் தாழ்த்துதல் என்ற பொருளும் அடங்கி இருக்கிறது. இதனை "தூங்குக தூங்கிச் செயற்பால" என்ற குறள் உணர்த்திவிடுகின்றது. எம்மைச் சுற்றி நடக்கின்ற கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருப்பதும் ஒரு தூக்க நிலைதான். பதினான்கு வருடங்கள் இராமனுக்கு கண்ணை இமை காப்பது போல விழித் திருந்து பார்த்த இலக்குவன், முடிசூட்டுவிழா நேரத்திலேதான் தன்னை அறியாமல் தூங்கினான். பாரமற்ற நிலையே உண்மையான தூக்கத் திற்கு இட்டுச் செல்கின்றது. படுக்கப்போறன், சாயப் போறன், கண்ணை மூடப்போறன், சரியப்போறன், தூங்கப் போறன் என்று பல தொடர் களால் தத்தம் அனுபவத்திற்கேற்ப சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அடிமைத்தளையில் இருந்த பாரத தேசத்திற்காக பாரதமாதா திருப் பள்ளியெழுச்சியை பாரதியார் பாடினார். இன்று இது எம் நாட்டிற் கும் தேவைதான் போல இருக்கின்றது. நாம் தூக்கத்தை மனதிற்குக் கொடுத்து விடக் கூடாது. அது ஒரு விழிப்புநிலையில் பூனையின் கண் களைப் போல எந்தச் சாமத்திலும் மினுங்கிக்கொண்டிருக்க வேண்டும்.

# சோறும் வேறும்

**அ)**

அம்மாவும் தங்கச்சியாக்களும் எங்கேயோ ஒரு கலியாண வீட்டுக்குப் போறதுக்காக வேளைக்கே சோறும் கறியும் காய்ச்சி வைச்சிட்டு ஒரு “நடப்போட” போட்டினம். பதினொரு மணிபோல அப்பா வயிற்றில கையை வைச்சுப் பசிக்குது எண்டார். நானும் ஒரு துள்ளுத் துள்ளிக் குசினிக் குப் போய் கோப்பையில சோறைப் போடேக்கைதான் கவனிச்சன், ஒரே நுள்ளான். என்ரை கையிலயும் ஏறத் துவங்கீட்டுது. எனக்கு விசராக்கிப் போட்டுது. அப்பான்ரை பசிய நினைக்கக் கவலையாக் கிடந்திச்சுது. அடுப்பைப் பார்த்தா நெருப்புத் தணலும் இல்ல, எல்லாம் சாம்பலாப் போச்சுது. வெளியில வந்து நுள்ளானை கையால பிடிச்சு நசிப்பம் எண்டு பாத்தா அது பிடிச்சு அமத்த அமத்த ஒவ்வொரு சோற்றுப் பருக்கையும் பெத்துத் தள்ளூற மாதிரி எங்கிருந்தோ வந்து கொண்டே இருக்குதுகள். வெயிலில் வைச்சிட்டுப் பார்த்துக்கொண்டு நிற்பம் எண்டு முடிவெடுத்தன். அவை அந்தச் சுட்டெரிக்கும் வெயிலில் மேல் நோக்கி வருவதும் சில அவசரமாய்க் கீழ் நோக்கிப் போவதுமாய் இருந்தன. அந்தப் போக்கும் வரத்தும் வெயில் பட எனக்கு ஆக்கினையாய் இருந்தது. என் முயற்சி பூரண வெற்றியளிக்காது என்பதை உணர்ந்து கொண்டேன். கிண்ணத்தைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தேன். அப்பா என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். குளுக்கோமா வினால் அப்பாவின் கண்களின் பார்வை நன்றாகக் குறைந்து போயிருந்தது. தோள்களில் கையை வைத்தேன் கையை நீட்டினார். நான் ஒரு முடிவெடுத்தேன். கறியுக்கையும் நுள்ளான் இருக்கோ எண்டு பாக்கையில்லை. எனக்கும் சோறைப் போட்டு ஒண்டையும் இனிப் பாக்கிறயில்ல

“நுள்ளான் சாப்பிட்டா நூறாண்டு வாழலாம்” எண்டு சொல்லிறவங்கதானே என்று அப்பாவுக்கும் கொடுத்து நானும் குழைத்துச் சாப்பிடத் தொடங்கினேன். இரண்டு மூன்று நாள் நுள்ளான் வயிற்றுக்குள் ஓடித் திரியிற மாதிரி ஊருற மாதிரி இருந்திச்சு. இப்ப எழுதயிக்கையும் கையில ஊருற மாதிரிக் கிடக்கு.

**ஆ)**

எனக்கு அவற்ற தாடியில சரியான விருப்பம். நல்ல வெள்ளைத் தாடி. வயித்துக்குக் கிட்ட வந்து நிற்கும். நுனியை முடிஞ்சு விட்டிருப்பார். அவற்றை கண்கள் நல்ல பிரகாசம். நரம் பெல்லாம் வெளியில தெரியும். அவற்றை கை எப்பவும் சரியான நடுக்கமாய் இருக்கும். கோயில்ல அவர்தான் பூசையாக்கிறவர். நான் தாடியப்பா எண்டுதான் சொல்றனான். அவர் இனிப்பில்லாத பச்சை யரிசிப் புக்கையும் கொஞ்சம் தோல் கறுத்த கதலி வாழைப்பழமும் தருவார் எனக்கு அதைச் சாப்பிடச் சரியான விருப்பம்.

அவர் சாமியாரான கதையை ஒராள் சொன்னதில் இருந்து சரியான கவலை. அவர் சின்னனில இருந்து மச்சம் சாப்பிடுற தில்லை. ஆனா மனிசிக்காரி சாப்பிடுற விசயம் இவருக்குக் கட்டினபிறகுதான் தெரிஞ்சது. ஆனா அதைப் பொருட்படுத் தாமல் இருந்தார்.

இவர் மச்சம் சாப்பிடுறதில்ல எண்டு தெரிஞ்சும் அவ மச்சம் மணக்கிற ஒரு கோப்பையுக்கை இவருக்கு சோறைப் போட்டுக் கொடுத்திருக்கிறா. இவர் கோபத்தோட “சந்நியாசி வேசங் கொண்டு சாகிறன்ரி அம்மா உன்னால” எண்டு சொல்லிப்போட்டு வெளிக்கிட்டுட்டாராம்.

**இ)**

எனக்கு அவர் ஒரு அண்ணன் முறை. என்னை உணவகத்துக்கு சாப்பிட அழைத்திருந்தார். என்னுடன் வந்திருந்த பேராசிரியரையும் அழைத்து வருகிறேன் என்பதை அவருக்குச் சொன்னேன். மகிழ்ச்சி யோடு அழைத்து வரச்சொன்னார். இலண்டனில் உள்ள அந்த உணவகத்தின் பெயரான “சம்பல்” என்பதும் அங்கே பின்னணியாக அழகுபடுத்தப்பட்டிருந்த எங்கள் பாரம்பரியமான சமையல் பாரம்பரியப் பொருட்களும் மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தன. சாப் பாடு வந்தது. சாப்பிடத் தொடங்கினோம். பேராசிரியர் கோப்பை யோடு போராடிக் கொண்டிருந் தார். போதும் என்பதுவாய் அவர் நிமிர்ந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அண்ணர் விடவில்லை.

“சாப்பிடுங்கோ சேர்” என்றார். இவர் இரண்டு மூன்று வாயை வைத்துவிட்டு மீண்டும் நிமிர்ந்தார். ஆனால் அண்ணர் விடவில்லை. கோப்பையை வழிக்கும் வரை அண்ணரின் வார்த்தைகள் பேராசிரி யருக்கு ஆக்கினை கொடுத்தபடியே இருந்தன. எனக்குச் சங்கடமாக இருந்தது. கடையை விட்டு வெளியே வந்தோம். பேராசியர் மெல்லிசாய் சிரிச்சு மண்டிக் கொண்டு சொன்னார், “என்ரை மனிசி கூட இப்பிடிச் சாப்பிடெண்டு ஆக்கினை பண்ணினதில்ல”. நான் சங்கடத்துடன் சிரித்தேன். அண்ணர் சொன்னார் “எனக்கு இங்க வந்த பிறகு சோற்றின் அருமை அதிகம் தெரியும். எனக்கு அதை யாரும் கொட்டினால் என்னை அறியாமலே ஏதும் சொல்லிப் போடுறனான். மனிசியோடும் பிள்ளைகளோடும் மல்லுக் கட்டி அது வேறை ஆக்களோடையும் தொத்திட்டுது குறை நினைக்காதையுங்க சேர்” என்றார். கடையில் இருக்கும் வரை சோறைக் கொட்டிப் போடுவினம் எண்டுதான் “சன்னதம்” ஆடியிருக்கிறார் எண்டு எனக்கும் புரிஞ்சுது. பனியுக்கை கஷ்டப் படுறவன் சுடுசோறைச் சாப்பிடுறதே கனவாக இருக்கேக்கை அண்ணற்றை எண்ணம் பிழையில்ல என்பதைப் போலவே பேராசிரியரும் என்னைப் பார்த்துச் சிரித்தார். இவை அனுப்பிற காசை வைச்சுக்கொண்டு இங்க சன்னதம் ஆடுறவை யின்ரை எண்ணந்தான் எனக்கு உடனே வந்திச்சு. சிரிப்பும் நெளிஞ்சு மறைஞ்சுது.

ஈ)

போராளியாக இருந்த மலைமகளின் “ஒரு கோப்பைத் தேநீர்” என்ற கதையில வாற ஒரு சம்பவம் எனக்கு இப்ப உடனே ஞாபகத்துக்கு வருகுது.

“காப்பரணைப் பலப்படுத்தவெனத் தரப்பட்டிருந்த உரப்பை களுள் நல்லதாக ஒன்றை எடுத்துக் கழுவி உதறி வெயில் படக்கூடிய இடமாகப் பார்த்து, விரித்து, அதன் மேல் சோற்றுப் பருக்கைகளைப் பரப்பிக் காயவிட்டு மீண்டும் அரிசியாக்கினோம்” தேநீர் சுடவைக்கும் அலுமினியப் பாத்திரத்தில் அதைக் கொட்டிக் கிளறிச் சூடேற்றி, அடுப்பிலிருந்து இறக்கி, அந்தப் பாத்திரத்தில் வைத்தே இடித்துப் பொடியாக்கினோம். வெகு அபூர்வமாக வந்த பிட்டையும் கூட காயவைத்து வறுத்தோம். அதில ஒரு பிடி அள்ளி வாயில் போட்டால் நறுக் முறுக் என்ற ஒலியுடன் தேவாமிர்தமாக வாயிலே கரையும்... கைதவறிக் கூட ஒரு சோற்றைக் கீழே போடமாட்டோம். மூன்று நேரமும் எஞ்சிய சோற்றை சிற்றுண்டியாக்கும் திட்டம்

*உடனடியாகவே அனைத்துக் காவலரண்களுக்கும் பரவலாக்கப் பட்டது" (புதிய கதைகள், பக் 18 -19)*

*எஸ்.ராமகிருஷ்ணனின் நாவல்களில் எனக்கு மிகவும் பிடித்த நாவல் "நெடுங்குருதி". அந்த நாவலில் வரும் சென்னம்மா என்ற பாத்திரம் பல நாட்களாக என்னைத் தொந்தரவு செய்தது.*

*"சென்னம்மாவின் கைகள் தரையைத் தேய்த்தபடியே வந்து மெல்ல எறும்புகளை அள்ளி வாயில் போட்டு மென்று தின்று விடுவாள். அவள் உதட்டு இடுக்கில் சிக்கி வெளியேறும் எறும்புகள் கூட அகன்ற அவள் முகத்தின் மேடு பள்ளங்களைக் கண்டு திகைத்து பயத்தோடு புருவ மயிர்களில் தடுமாறும் போது அவள் விரல்கள் எறும்புகளைத் தேடிப்பிடித்து நாக்கில் ஒட்ட வைத்துக்கொள்ளும்"*

*சி.மகேந்திரனின் "நானும் சினிமாவும்" என்ற நூலில் சோற்றின் அருமையை அவர் சொல்லும் விதம் அலாதியானது. விதைக்கும் போது சில நெல்கள் தவறிவிடுகின்றன. அதில் சில முளைப்பதில்லை. கதிராகும்போது சிலவற்றைப் பறவைகள் தின்றுவிடுகின்றன. அறுவடையில் சில தவறிவிடுகின்றன. வீடு கொண்டு வரும் போது சில, அரிசியாக்கும் போது சில, அரிசி யாக்கியதை சோறாக்கும் போது சில என்று கோப்பைக்கு எவ்வளவோ போராடி வரும் சோற்றைச் சாதாரணமாக நாம் கொட்டி விடுவது அபத்தம் அல்லவா? என்ற பொருள்பட எழுதியிருந்தார்.*

*உணவு என்பது தனியே வயிற்றுக்கானது மட்டுமல்ல. அதுமனதோடும் பண்பாட்டோடும் பிணைந்தது. வாழ்வின் அடையாளம் ஆவது. **2006** இல் A **-9** வீதி பூட்டப்பட்ட போது பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பில் சஞ்சரித்திருந்தோம். உணவை மருத்துவர்கள் மருந்து என்கிறார்கள். ஒரு சாண் வயிற்றுக்கானது வாழ்வும் உழைப்பும் என்று சொல்லிக் கொண்டே அதில் நாம் அக்கறை கொள்வதில்லை. கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா? என்ற வறுமை வரும் போது அருமை வரும் போது புதுப்புதுச் சேமிப்புகளில் மனம் இறங்கி விடுவதும் நடந்துவிடுகின்றது. நோய் வந்து கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் இருக்கும் போதும் அதன் பெறுமதி பிரமாண்டம் கொள்கின்றது. அப்போது உயிராகவும் உணவு மாறும். உணவு என்பது உயிரையும் தரும் உடலையும் வளர்க்கும். உயிரையும் அழிக்கும் உடலையும் கெடுக்கும். எல்லாம் எம் கையிலும் வாயிலும்தான்.*

# எங்கேயும் எப்போதும்

**அ)**

பெண் போராளி ஒருவரின் கையில் இருக்கும் துப்பாக்கி போல அவர் அதை நீட்டிக்கொண்டிருந்தார்.

பஸ் கண்டியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. மலையின் எழிலும் அது தரும் பயமும் சேர்ந்து ஏறிக் கொண்டிருக்கும் போதுதான் இது நடந்தது.

என்னைப் பார்த்துச் சொன்னார், "இண்டைக்கு இவனுக்கு இதாலே குத்தாமல் விட மாட்டன்." என்னிலும் வாடலான ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒராள் அதே ஐம்பதில் நிற்கும் அம்மணிக்கு பின்னாலே நின்றார். தன்னைப் பற்றித் தான் அந்த மனிசி கதைக்குது எண்டு தெரிந்தோ தெரியா மலோ அந்த மனுசன் பஸ் ஏறும் குலுக்கலுக்கு நடுங்கிப் பின்னாலே முன்னாலே வருவதும் போவதுமாய் நின்றார்.

மனிசி எனக்குக் காட்டின நேராக்கின ஊசியை அவர் வரும் வழிக்காகக் காத்திருக்க வைத்தார். அது ஏறிவிட்டது. எங்கே ஏறியது என்பதை என்னால் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் கண்ணில குத்தின மாதிரி அந்த மனுசன்ர கண் முழிசி ஏன் குத்தினது என்ற கேள்விக் குறியோடு தவிச்சது எண்டதை மட்டும் கவனிச்சன்.

ஆளுக்குச் சொன்னன் "ஐயா கொஞ்சம் தள்ளி நில்லுங்க" எண்டு. அது ஆருக்கான பாதுகாப்பு என்பதையும் எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியேல்ல.

மனிசின்ர முகத்தைக் கவனிச்சன். பரம திருப்தி. ஊசியைக் காணல்ல. "இவங்களுக்கு இதுதான் செய்யோணும் எண்டா".

*நான் மிக்க "மரியாதையோடு" புன்னகைத்தேன்.*

*பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது.*

**ஆ)**

*"தம்பி பின்சீற்றிருக்குப் போய் இருங்கோ"*

*பின்சீற்றை நோக்கி முன்னேறினேன்.*

*இரண்டு பேர் இருந்தார்கள். இரண்டு பேரும் கரை ஜன்னலில் இருந்தார்கள். தொங்கலில் ஓர் ஆச்சி. அடுத்த தொங்கலில் ஒரு பெடியன். பெடியன்ரை முகம் ஒரு "சுழிப்பில்" இருந்தது.*

*நடுவில் இருந்தன். அப்பதான் எனக்கு விளங்கிச்சு. அம்மாட்ட இருந்து "மீன்வாசம்" தவழ்ந்து வந்தது.*

*சுருங்கிய கன்னம், இடுங்கிய கண்கள், நெரிஞ்சுபோன உடல்.*

*"எங்கே போட்டு வாறியள் அம்மா"*

*"உதயனுக்குப் போட்டு வாறன்" கையில இரண்டு மூன்று உதயன் பேப்பர் இருந்தது.*

*என்ரை மூண்டு பெடியங்கள்ள இரண்டு பேரை கடலுக்கை தொழிலுக்குப் போகேக்க சுட்டுப் போட்டாங்கள் ராசா". கண்கள் நனைந்திருந்தன.*

*"என்ரை கடைசி வெளிநாட்டுக்கு ஒரு மாதிரிப் போட்டான். அவனுக்கு அங்க காட் கிடைக்கிறதுக்கு தமையன் மாரைப் பற்றி வந்த செய்தியைக் காட்டுறது நல்லதாம். பாவம் பெடி அங்கை நிண்டு கஸ்டப்படுகுது." அவவின்ரை நாத் தளுதளுத்தது.*

*பேப்பரை எனக்குக் காட்டினா. எனக்கு அந்தரமா இருந்தது. இப்ப மீன் மணக்கேல்ல.*

*பஸ் ஓடிக் கொண்டிருந்தது.*

**இ)**

*மட்டக்களப்பில் இருந்து இரவு 9.30 இற்கு பஸ் வெளிக் கிட்டது.*

*நாங்கள் மூன்று நண்பர்களும் சொகுசாக அமர்ந்து கொண்டோம்.*

*நான் பஸ்ஸில் ஏறியதும் கையில இருந்த புத்தகத்தையும் பிறகு முகப் புத்தகத்தையும் பார்த்தேன்.*

கொஞ்ச நேரத்தாலே நித்திரையாப் போனன்.

பக்கத்திலிருந்த நண்பர் தட்டி எழுப்பினார். "பஸ்ஸின்ரை ஓட்டத்தைப் பார்றா" எண்டு. எங்கேயோ தலைதெறிக்க ஓடுற மாதிரிக் கிடந்தது. திடீரென்று எழும்பினதாலோ என்னவோ பயமாக் கிடந்திச்சு.

நேரத்தைப் பார்த்தேன் 11.30.

அதிக திருப்பங்களைக் கொண்டிருந்தது அந்தப் பாதை என்று விளங்கியது. ஒவ்வொரு திருப்பத்திலயும் என்ரை கையில தான் பஸ் இருக்கென்றுமாதிரி நானும் டிரைவர் போலாகினேன். கொண்டக்டர் முன்சீற்றில இருந்து நல்ல நித்திரை.

கொஞ்சத்தூரம் போக றோட்டுக் கரையா இருந்த பற்றைகள் எல்லாம் எரிஞ்சுகொண்டிருந்தது. பெரிய நெருப்பு. என்னெண்டே தெரியேல்ல. பஸ்சும் நிற்கேல்ல. அந்த வெளிச்சத்தில தான் பார்த்தேன். எனக்கு இடப்பக்க நேர் சீற்றுக்குப் பின்னாலே ஒரு பெடியனும் பெட்டையும். அவனின் நெஞ்சில் அவள் படுத்திருந் தாள். ஆனால் முழிப்பு எண்டு தெரிஞ்சது அவன் கைகள் அவளை வளைத்திருந்தது. சில நொடிகள்தான் திரும்பி விட்டேன்.

ஆனால் என் கண்கள் கள்ளத்தனமாக அவர்களை அடிக்கடி பார்த்துக்கொண்டது. பஸ்ஸின்ரை வேகத்தையோ றோட்டின் பயங்கரத்தையோ மறந்துபோனன். பக்கத்தில இருந்தவங்கள் வாயைப் பிளந்து நித்திரை.

பஸ் ஓடிக்கொண்டிருந்தது.

ஈ)

பயணங்கள் தரும் அனுபவங்கள் அலாதியானவை. புகைவண்டியில் பஸ்வண்டியில் விமானத்தில் நடைப்பயணத்தில் அவை தீராக்காதலுடன் எம்மை அணைத்துக்கொள்கின்றன. பயணங்களில்தான் சுஜாதா அதிகம் எழுதியிருக்கிறார் என்று அறிந்திருக்கிறேன். எனக்குத்தெரிய பஸ்ஸில குறிப்பெடுப்பவர் களும் இருக்கிறார்கள். பரீட்சைக்குப் படித்துக்கொண்டு செல்பவர்களும் இருக்கிறார்கள். மனிதர்களைப் படிப்பதுதான் பேரனுபவம். வாழ்க்கையின் வளைவு நெளிவு நேர்ப்பாதைகளில் அவை எம்மை அழைத்துச் செல்கின்றன. எங்கேயும் எப்போதும் அனுபவங்கள் விபத்தைவிடவும் அதிகம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

# இனிப்புக் கதைகள்

**அ)**

***1989***

*எங்கன்ரை வீட்டுக்கு முன்னாலதான் அந்தக் கடை இருந்தது. எனக்குக் காலைமை எழும்பின உடன அந்தக் கடைக்குப் போய் ரொபி வாங்கிறது தான் என்ர முதல் வேலை. எனக்கு இனிப்பெண்டால் சரியான விருப்பம். திடீரென நாயெல்லாம் பயங்கரமாக் குரைக்கத் தொடங்கியது. என்னெண்டே விளங்கேல்ல. கேற்றைத் திறந்து எட்டிப் பார்த்தேன், பயந்துபோனன். பெரிய பெரிய சப்பாத்து களோட தலைப்பாவோட குடுமியோட பெரிய இரும்புத் தொப்பியோட ஆமிக்காரர். அவங்கள் நேரே போய்க் கொண்டிருந்தாங்கள். கடை திறந்திருந்தது. கடை அண்ணையைக் காணல்ல. அவங்கள் தாண்டிப்போனதும் கடைக்கு ஓடிப் போனனன். அவற்ற முகம் பயத்தில வேர்த்திருந்தது. நான் ஐஞ்சு ரூபாவை நீட்டி ரொபி தாங்கோ எண்டன். "உனக்கு இப்ப ரொபியோ? போய்க் கொப்பரட்ட வேண்டு" எண்டு பேசிப் போட்டார். எனக்கு ஒரு மாதிரிப்போச்சு. சாக்குக்க கிடந்த ஒரு சக்கரைக் கட்டியை எடுத்துக்கொண்டு வீட்ட ஓடி வந்திட்டன். அம்மா சரியான பேச்சு. திடீரெண்டு எங்கேயோ வெடிச் சத்தம் கேட்டிச்சு, ஆக்கள் றோட்டால குழறிக் கொண்டு ஓடுறது கேட்டிச்சு. நான் அம்மாக்குப் பின்னால நிண்டன் அப்பா தலையைத் தடவிக்கொடுத்தார். எனக்குப் பயத்தில அழுகை அழுகையா வந்தது. கனநேரத்திற்குப் பிறகு எல்லாம் அமைதியாச்சு. தலையைச் சொறிவம் எண்டேக்கை தான் கையைப் பார்த்தேன். சர்க்கரை உள்ளங்கை எல்லாம் கரைஞ்சுபோய்*

*பார்க்க அருவருப்பாக இருந்தது. ஓடிப் போய்க் கையைக் கழுவிப் போட்டுத் தலையைச் சொறிஞ்சு கொண்டு நிண்டன். அப்பா கிட்டக் கூப்பிட்டுத் தலையைத் தடவி விட்டார். அவற்றை கையை நான் இறுக்கிப் பிடிச்சன். சர்க்கரை கரைஞ்ச மாதிரி என்ரை கண்ணில இருந்து தன்ரை பாட்டில கண்ணீர் வந்தது.*

**ஆ)**

***1994***

*பள்ளிக்கூடம் முடிஞ்சதும் அந்தக்கடைக்குப் போய்ப் பத்து ரூபாக்கு ரொபி வாங்கினன். பத்து மைலேடி ரொபி. வீட்ட நோக்கி நடக்கத் துவங்கினன். ரொபி தின்னேக்கை எனக்கு தனியே நடக் கோணும் போல இருக்கும். ஆக்கள் நிக்கேக்கை எண்டா அவங் களுக்குத் தெரியாமல் பொக்கற்றுக்க கையை விட்டு அதுக்கை வைச்சுச் சத்தம் போடாம உரிச்சு வெற்றிகரமா அதைப் பொக்கற்றுக்கு வெளி யால எடுத்து தலையைச் சொறிஞ்சு பிறகு வாயடியில சொறியிற மாதிரிச் சொறிஞ்சு டக்கெண்டு கொட்டாவி விடுற மாதிரி வாயைத் திறந்து ரொபியை உள்ளுக்கை தள்ளி பேந்து அதை உமியேக்க ஆரும் கண்டா ஒண்டுதான் இருந்தது எண்டு சொல்லி அமசடக்காச் சிரிக்கோணும். தனிய எண்டா உரிச்சு உரிச்சு திண்டு கொண்டே இருக்கலாம். ரொபித் தாளை வடிவா விரிச்சிட்டு அதை ஊதிவிட அது பறக்கிறதப் பார்த்துக்கொண்டே அடுத்த ரொபியை உரிக்கத் தொடங்கலாம். ஒன்பது ரொபியும் வீட்ட போறதுக்கிடையில் திண்டிட்டன். கடைசி ரொபியைப் பக்குவமா எடுத்தன். ஆறுதலா உரிச்சு வாயுக்கை போட்டு உமிழத் தொடங்கினன். இவ்வளவு நேரமும் அவசரப்பட்டு கடிச்சுத் திண்ட எனக்கு இது அமிர்தம் போன்ற சுவையைக் காட்டத் தொடங்கியது. உமிழ உமிழ முடிகிறதே எண்டு கவலையும் வந்தது. அடிவரையான சுவையும் முழுதாகப் புலப்படத் தொடங்கியது. இனிமை. இனிமை. இனிமை.*

**இ)**

***1996***

*என்ரை இடக்கையை அவர் இறுக்கிப் பிடித்திருந்தார். எனக்குக் காற்சட்டை நனைஞ்சிடும் மாதிரிக் கிடந்தது. அவருடைய முகம் எனக்கு விகாரமாகத் தெரிந்தது. அவர் பற்களை நெறுமிக் கொண்டார். அவருடைய வலக்கையில் ஒரு தடித்த குட்டிப் பிரம்பு இருந்தது. “உனக்கு களவெடுத்து இனிப்புத் தின்னக் கேக்குதோ?”*

எண்டு அடிக்கத் தொடங்கினார். உள்ளங்கையில் இடிவிழுவதைப் போல இருந்தது. கண் கரையிற மாதிரிக் கிடக்கு. திடீரெண்டு பார்த்தன் ஜன்னலுக்குள்ளால பொன்னம்மாக்கா எட்டிப் பார்த்துக் கொண்டு நிக்கிறது தெரிஞ்சது.

எனக்கு பெரிய மானக்கேடு ஆகிற மாதிரிக் கிடக்கு. இப்ப கையை விட்டார். அவர் என்ரை மாமா. நான் நல்லாப் படிக்கோணும் எண்டுட்டு அம்மா இவற்ற வீட்டை கொண்டு வந்து விட்டவர். எனக்கு இங்க வந்தோண்ண ரொபி சாப்பிட வழி இல்லாமல் போச்சு. அண்டைக்கு சாமியறைக்க கும்பிடேக்கைதான் பார்த்தன். ஒரு அம்பது ரூபா அங்க கிடக்கு. அதைச் சுருட்டி எடுத்து விளையாட்டுக் காட்டிப் போட்டன். இந்தாள் பிடிச்சுப் போட்டுது. அன்ரி கொண்டந்து தேத்தண்ணியை தந்தா வாங்கினன். நல்லாச் சுட்டுது. குடிச்சன் இனிப்புக் காணாமல் இருந்தது. நான் ஒண்டும் சொல்லாமல் குடிக்கத் தொடங்கினன்.

**ஈ)**

இனிப்பு என்பது நாவில் மட்டுமல்ல உள்ளத்திலும் இனிப்பது. சில விடயங்கள் வெளியில் இனிக்கின்றன. சில விடயங்கள் உள்ளில் இனிக்கின்றன. நினைவுகள்,இலக்கியம் கூட இனிக்கவே செய்கின்றன. சில கனவுகளும் இனிக்கின்றன. எமது செயல்களும் இனிக்க வைக்கின்றன. உண்டு வரும் மகிழ்ச்சியை விட உள்ளத்தே நினைத்துவரும் மகிழ்ச்சி மேலானது. இதனை வள்ளுவர் காமத்துப் பாலில், "உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால் கள்ளினும் காமம் இனிது."(உள்ளுதல் - நினைத்தல்) என்கின்றார். இதனையே இன்று நினைத்தாலே இனிக்கும் என்கிறோம். நாமே நமக்கு இனியராய் இருப்பதும் நம்மிலும் இனியன் என்று இறைவனை அடையாளம் கொள்வதும் ஆத்மிகத்தின் அலைவரிசையாகிறது. இதனை அப்பர் சுவாமிகள்,

"என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே."

என்று பாடியுள்ளார். மொழி, கலாசாரம், வாழ்வு எல்லாமே நமது விருப்புகளால் இனிமையாகின்றன. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்கிறான் பாரதி. பாரதிதாசனுக்கு எல்லா இனிமையை விடவும் தமிழே இனித்தது.

வாழ்வே இனிமைதான். அதிலும் இன்பம் மட்டுமல்ல துன்பமும் ஒரு அனுபவ இனிமைதான். இனிமை நாவிலும் வாழ்விலும் கணந் தொறும் கணந்தோறும் கலந்து அனுபவிக்க வேண்டியது. கடலின் அலை போல காதலுடன் ஒடி வந்தபடியே இருக்கிறது. கால்களில் பரவும் ஈரம் தலையில் ஏறி வானத்தை எம் கையில் வீழ்த்திச் சிரிக்கிறது.

# வரமும் சாபமும்

**அ)**

*அந்த மிருதங்கச் சத்தம்தான் என்னை அந்த வீட்டுக்கு முன்னால நிறுத்திவைத்திருந்தது. உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றன். ஒரு மனுசி கேற்றைத் திறந்து என்னட்ட வந்து "என்ன ராசா ஏன் நிக்கிறியள்" எண்டு கேட்டா, அவவின்ரை குரல்ல ஒரு பரிவு இருந்தது. அவ சரியான கறுப்பு. ஆனா ஒரு வித்தியாசமான வடிவு இருந்தது. மிருதங்கம் அடிக்க விருப்பமோ எண்டா, நான் ஒண்டுஞ் சொல்லாமல் நின்றன். என்ரை கையைப் பிடிச்சு உள்ளுக்க வாவன் ராசா எண்டா. நானும் பாவைப் பிள்ளையாகிப் பின்னால போனன். அங்க என்னோட படிக்கிற வினோதன்தான் மிருதங்கம் அடிச்சுக்கொண்டு இருந்தான். அவன் சிரிச்சான். அவன்ரை வீடாக்கும் எண்டு நினைச்சன். "இவன் எங்களுக்கு ஒரு பேரன் முறை" எண்டு அவ சொன்னா. நான் வாங்கில்ல பின்பக்கம் சரியாப் படாத மாதிரி இருந்தன். அப்ப தான் அவரும் வந்து எனக்குப் பக்கத்தில இருந்தார். என்ரை தோளைத் தொட்டார். இப்ப தான் நான் சரியா இருந்தன். நல்ல வடிவா என்னைப் பாத்துச் சிரிச்சார். அவ எள்ளுப்பா கொண்டு வந்து தந்தா. எனக்கு வாயூறிச்சு. நான் காட்டிக்கொள்ளாமல் இருந்தன். முற்றத்தில இருந்த வேப்பமரத்தின்ரை காற்று கொஞ்சம் வேர்த்திருந்த முகத்திலபடச் சோக்கா இருந்தது. நான் எள்ளுப்பாவைச் சாப்பிடத்தொடங்கினன். வினோதன் எழும்பிப் போட்டான்.*

*"எங்களுக்கு அஞ்சும் ஆம்பிளைப் பிள்ளையள். எல்லாரும் வெளிநாட்டில. இப்ப எங்களை வரச் சொல்லி ஒரே ஆக்கினையாக்கிடக்கு. அதுதான் யோசிச்சுக்கொண்டு*

*நிற்கிறம். கொம்மாவை எனக்கு நல்ல பழக்கம். ஒருக்கா அவவை இங்க வரச்சொல்லு.”*

*இரண்டு பேரும் பத்துவயதான என்னைவிட, குழந்தைப் பிள்ளைமாதிரிச் சிரிச்சினம். எனக்கு அவையைச் சரியாப் பிடிச்சுக் கொண்டுது. அவ கேற் மட்டும் கொண்டந்து விட்டா. அப்பிடி விடேக்கை என்ரை உள்ளங்கையைப் பிரிச்சு ஏதோ வைச்சா. றோட்டில இறங்கினபிறகுதான் பாத்தன், நூறு ரூபாத்தாள். மிருதங்கம் அடிக்க மறந்தது அப்பதான் ஞாபகம் வந்தது. அன்றுமுதல் அவவை அம்மம்மா என்றுதான் கூப்பிடுறனான்.*

**ஆ)**

*வெள்ளவத்தையில் உள்ள அந்த வீட்டுக்கு இரவு 8.30 இற்கு அழைப்பினை ஏற்படுத்தினேன். அந்த அம்மா சற்றுக் கடுமையாகப் பேசினா. “நான் தனிய இருக்கிறன். என்னால கீழ இறங்கி ஏறுறதே கஸ்டம் நீங்கள் 6 மணிக்கு வாறது எண்டு சொன்னதாலதான் ஓம் எண்டன். அதுவும் வேந்தன் கேட்டபடியாலதான் ஓம் எண்டன்” நான் சொன்னன், “என்னம்மா செய்யிறது றெயின் வழியில பிரச்சினையாப் போச்சு” என்று சமாளித்து வைத்து விட்டேன். நானும் மனைவியும் வெள்ளவத்தையில் இறங்கி அந்த வீட்டு இலக்கத்தைக் கண்டுபிடித்துக் கேற்றைத் திறந்து அழைப்புமணியை அழுத்தினோம். “வாறேன்” என்ற சத்தத்தோடு ஒரு தடியை ஊன்றியபடி வந்தா. ஒன்றும் சொல்லாமல் படியில் சற்றுத் தடுமாறியபடி ஏறினா. எங்கள் அறையைத் திறந்துவிட்டா. பாத்றூம் எதுவென்றும் சில லைற் சுவிற்ச் எதுவென்றும் சொன்னா. நான் ஓடி ஓடி அவைகளைப் போட்டு நிற்பாட்டிக் காட்டினேன். “என்ரை கதவும் பூட்டி இருக்காது. எதுவும் தேவையெண்டா கதவைத் தட்டுங்கோ 5 நிமிசமாகியும் வராட்டா உள்ளுக்க வந்து பாருங்கோ சில நேரம் செத்தும் இருப்பன் எண்டு“ சாதாரணமாச் சிரிச்சுக்கொண்டு சொன்னா. எனக்கும் மனைவிக்கும் டக்கெண்டு ஒரு மாதிரிப் போனது மட்டுமில்ல. ஏதும் விதிவந்து மாட்ட வைக்குதோ எண்டும் முழிசினன். எப்படி விடிந்தது எண்டு தெரியாதளவுக்கு விடிந்திருந்தது. எழும்பின உடனேயே அம்மாவை எழுப்பணும் எண்ட எண்ணம்தான் வந்தது. ஆனால் சிரமபரிகாரம் செய்து குளித்துவிட்டு வந்து வெளிக்கிட்டபிறகே கூப்பிட்டோம். சத்தத்தைக் காணல்ல. எனக்கு நெஞ்சு இடிக்கத்தொடங்கியது. அறைக்கை சத்தம் கேட்டபிறகே நிம்மதி பிறந்தது. திறப்ப*

அவேட்டக் கொடுத்து "பின்னேரம் வருவம்" எண்டன். "எனக்கு அவர் போனரு வருசம் செத்தபிறகு ஒவ்வொருநாளும் சாகிறதத் தான் நினைச்சுக்கொண்டிருக்கிறன். ஒரு பெடியன்தான். அவன் குடும்பத்தோட தெஹிவளையில இருக்கான். ஏதும் அவசரம் எண்டா வருவான். அதுகளுக்குக் கரைச்சல் கொடுக்கிறது சரியில்லத்தானே" எண்டா. கீழே இறங்கினோம். மிக இளமையான அம்மாவினதும் அவரினதும் இணைந்த புன்னகைப் படம் எங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

இ)

இலண்டனில் அம்மம்மா சொன்ன வீட்டைக் கண்டு பிடிப்பதற்கு என்னை அழைத்துக்கொண்டு சென்ற அண்ணரின் கார் உதவி செய்தது. எட்டுமாடிகளைக்கொண்ட அந்தக் கட்டிடத்தின் முன் கார் நின்றது. குளிராடைகளையும் ஊடுருவிக் குளிர் அறைந்தது. ஐந்தாவது மாடியில் என்று சொல்லியிருந்தார்கள். பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் அவர்களைக் காணப்போகும் பேராவல் என் உள்ளத்தில் மோதிக் கொண்டிருந்தது. அம்மம்மாவும் அவரும் மூடிக்கட்டிக்கொண்டு நின்றார்கள். "வாடா" என்றார்கள். அந்த அன்பு இன்னும் அதிகரித்திருக்கிறது என்பதை உணர்ந்தேன். இருவரும் மாறி மாறி என்னைத் தழுவிக்கொண்டார்கள். மூன்றாவது மகனின் வீடது. பேரப் பிள்ளைகள் எங்களைக் கண்டுகொள்ள வில்லை. மருமகளாக இருக்கவேண்டும் சிரித்துவிட்டு மறைந்தார். அவர்களின்ரை றூமுக்கை போனம். கொஞ்சம் விசாலம்தான். ரீ.வி, பிறிஜ், மேசை(அது முழுவதும் குளிசைகள்தான்) அம்மம்மான்ரை கண் கலங்கியிருந்தது. அவர் ஒன்றும் கதைக்கேல்ல. "நாங்கள் வருத்தம் எண்டா டொக்டரிடம் காட்டிறதுக்கு மட்டும்தான் வெளியில போறம், பாத்றூம் அட்டாச்தானே" என்றும் பெரிய ஜோக் சொல்வதுபோல் சிரித்தார் அம்மம்மா. சோடாவைக் குடித்தோம். வெளிக்கிடும் போது அம்மம்மா, "போகும் போது திருப்பியும் ஒருக்கா வாடா" எண்டிட்டு கையுக்கை ஏதோ திணித்தார். கட்டித்தழுவினேன். என் கண்ணிலும் நீர். காரில் ஏறியதும் பார்த்தேன். கையில நூறு பவுண்ஸ்.

அண்ணர் வீட்ட போனதும் ஒரு கவிதை எழுதினதும் தான், கண்ணீர்கட்டுப்பட்ட மாதிரிக் கிடந்தது.

சங்கீதங்களால் நிறைந்திருந்தது வாழ்வு

தென்னங் கீற்றில்

தென்றற் காற்றில்
பனை வடலிகளில்
ததும்பி நிறைந்திருந்தது வாழ்வு

சங்கீதக் கதிரையாகி
இங்கு வந்து நிற்கிறது வாழ்வு
பனிக்கதிரையில் இருந்து விட்டோம்!
இப்போது கதிரையாகி விட்டோம்!
இளைப்பாறல் எங்கள் விதியாகி விட்டது!

கதிரைகள் வேர் கொண்டு விட்டன.
கதிரைகளில் பேரப்பிள்ளைகளுக்காய்
மடிகள் காத்திருக்கின்றன
மடிக்கணினிகளும் ஐ பாட்களும்
அவர்கள் மடிக்காய்க் காத்திருந்தன

பனிவிழும் தெருக்களில்
உதிர்ந்த சருகுகளானோம்
தெருக்களைப் பார்க்கும்
ஜன்னல்களானோம்

ஜன்னல்கள் சிறகுகளற்றவை
வீட்டுக்காவலுக்காகவே
உருவாக்கப்பட்டவை
பார்வைக்கு அழகானவை

ஜன்னல்களுக்கு
ஒரு காலத்தில் கால்கள் இருந்தன
சிறகுகள் இருந்தன
ஆசைகள் இருந்தன

ஜன்னல்கள் வீட்டைப் பார்க்கின்றன

*தெருவைப் பார்க்கின்றன*

*இந்த ஜன்னல்களை யாராவது திறந்துவிடுங்களேன்*
*குளிர் என்றாலும் பரவாயில்லை*
*உயிர் போகிறது!*

**ஈ)**

*முதுமை என்பது இன்றைய காலத்தில் வரம் என்று கூறலாம், முதுமை என்பது எல்லோர்க்கும் வாய்க்காத ஒன்றாக மாறிவிட்டது. சாபம் என்றும் கூறலாம் ஏனெனில் வாழ்ந்து கொண்டே சாகவைப்பது. ஒரு முதியவன் இறக்கும் போது நூலகம் எரிகிறது என்கிறார்கள். ஒரு முதியவன் இருக்கும் போது அவன் உள்ளம் எரிகிறது. முதுமை ஒரு குழந்தையின் புன்னகை பொருந்திய அழகிய தருணம். அதைப் புரிவதற்கு இயந்திர வாழ்க்கை உதவாதாம் நாம் என்னசெய்வது? பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று சொல்லி எம் வாழ்வைச் சீரழிப்போம். மகிழ்ச்சி*

# நாவலும் ஆவலும்

**அ)**

எனக்குப் பள்ளிக்கூடத்திலயும் நாவல்பழம் கொஞ்சம் தான் தாறவங்கள். சிலவேளை கிடைக்கிறேல்லை.எனக்கு நிறையச் சாப்பிடத்தான் விருப்பம். "நாவல்" கலராத்தான் கனவு கூட வாறது. எப்ப வீட்டுப் பூசை வருமெண்டு காவல் இருப்பன். அண்டைக்கு அத்தையவைதான் கடலை, அவல், மோதகம் எல்லாம் செய்துதந்தவை. அம்மா தொட மாட்டாவாம். அப்பாவும் நானும் தங்கச்சியாக்களும் சேர்ந்து படையல் வேலையத் தொடங்கினம். அம்மா வீட்டுக்கு வெளியில நிண்டு ஏவிக்கொண்டு நிண்டா. நாவல் பழம், விளாம்பழம் கூடப் படைச்சிருந்தம். உண்மையைச் சொன்னா வாயூறி வாயூறி படைச்சம். விளக்குக் கொளுத்தி, கற்பூரத்தை யும் கொளுத்தி சாம்பிராணிப் புகையை காட்டினம். புகை அழகழகாக நெளிஞ்சு மூக்கைத் தொடேக்கதான் அந்தச் செய்தியை அத்தை கடவை யடியில நிண்டு கொண்டு சத்தமாச் சொன்னா. "இயக்கம் எல்லாரையும் உடனடியா இங்க இருந்து போகட்டாம்". அம்மா கத்திக்கொண்டு உள்ள வந்தா. பத்திரகாளியம்மன் பூசையறைக்கை வந்தது மாதிரிக் கிடந்தது. பெட்டிக்கே இருந்த இரண்டு மூன்று நகைகளையும் (தாலிக் கொடி அப்பேக்கை அடைவு) எல்லாற்றை உடுப்புகளையும் முக்கியமான சாமான்களையும் இழுத்து மூன்று பெட்டிக்கை அடுக்கினா. சிலதுகளை உரப்பையுக்கை அடுக்கினா. தென்மராட்சியில இருக்கிற மந்துவில் அம்மம்மா வீட்டை போறதுதான் திட்டம் என்பது அம்மாவின் சொற்பொழிவில் இருந்து புலனாகியது. அப்பாவையும் துரிதப்படுத்தினா. சைக்கிள்ள பெட்டியளக் கட்டிப்போட்டு கடைசித் தங்கச்சியை அப்பா சைக்கிள் முன்னுக்கு ஏத்தினார். படைச்சது

எல்லாத்தையும் ஒரு பையுக்கை எடுத்துக்கொண்டு வாவன் எண்டு அம்மா பேசினா. நாவல் பழத்தை மட்டும் இரண்டு பொக்கற்றுக் கையும் அடைஞ்சுகொண்டு பையை நீட்டினன். அம்மா ஓடிப்போய் ஆடு, மாடுகளுக்கு புல்லுகளைக் கொட்டிப் போட்டு ஓடி வந்தா. அவவுக்கு எப்படியும் இரண்டு நாளுக்க வந்திடுவம் எண்டு நம்பிக்கை. அழுது ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு வெளியில போனா. நாங்கள் ஒரு திகைப்பிலதான் இருந்தம். றோட்டெல்லாம் சனமும் சத்தமும் இருட்டும். அப்பா சைக்கிள உருட்டிக்கொண்டு வர நாங்கள் பின்னால போனம். அம்மான்ரை தலையில உரப்பை. முள்ளிவெளி எண்டு சொல்லிச் சினம். அந்த வெளியும் இருட்டும் சனமும் கதையும் தலையைச் சுத்திற மாதிரி இருந்திச்சு. பத்தையளுக்கு மேலே ஏதோ பூச்சியள் மினுங்கிக் கொண்டு இருந்திச்சு. பாத்துக்கொண்டிருக்க சில நட்சத்திரங்கள் மண்ண நோக்கி விழுந்துகொண்டு இருந்திச்சு. இதுதான் எரி நட்சத்திரமோ எண்டு நினைச்சுக்கொண்டு பொக்கற்றுக்க கையை விட்டு நாவல்பழத்தை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினன். அந்த இருட்டுக்க நாக்கை இழுத்துக் கலர் பாக்கேலாத கவலையை யாரட்டைச் சொல்லிறது. நடந்து கொண்டிருந்தம்.

**ஆ)**

இன்னும் கொப்பி முடிய நாலுபக்கம்தான் இருக்கு எண்டுறது பெரிய புளுகமாக இருந்தது. கொஞ்சம் பெரிய எழுத்தாக எழுதத் தொடங்கினன். இண்டைக்குக் கொப்பி முடியாது என்பது எவ்வளவு பெரிய கவலையாக் கிடக்குது. இண்டைக்கு அந்தக் கிழவியைக் காணேக்கை எனக்குக் கவலை வரப்போகுது. இந்த ரீச்சருக்குக் கனக்க எழுதத்தரத் தெரியாது. என்னத்தைப் படிப்பிக்கினம். என்னை விட்டா “அ”னாவையே ஒரு பக்கத்தில எழுதுவன். அப்படி எழுதிறது தான் நல்லது எண்டு இந்த ரீச்சருக்குத் தெரியாது. கோட்டுக்க எழுதோணும் எண்டு பேசிக்கொண்டும் காதைப் பிடிச்சு முறுக்கிக் கொண்டும் நிற்பா. எண்டாலும் நாளைக்குக் கொப்பி முடியும்தானே என்ற நினைப்பு சுகமாத்தான் இருந்தது. கொப்பி முடிஞ்சிருந்தது. பள்ளிக்கூடம் விட்டோண்ண வெளியில ஓடினன். கிழவியட்ட ஆரோ இரண்டு பெடியள் காசைக் கொடுத்து வாங்கிக்கொண்டு நிண்டினம். கிழவி கொப்பிக்கு எனக்குத் தரும் எண்டு நினைச்சுக் கொண்டே நீட்டினன். இந்தாடாப்பா எண்டு ஒரு சரை நாவல் பழத்தைச் சுற்றித் தந்தா. அதைப் பிரிச்சுத் திண்டு கொண்டு நடக்கத்

தொடங்கினன். "நாளைக்கு எழுதத் தொடங்கிற கொப்பி வேளைக்கு முடியோணும் கனக்க எழுதத் தாற ரீச்சர் எங்களுக்கு வரவேணும்"

**இ)**

எனக்குள் அது ஒரு பெருங்கனவைப் போல் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்றது. ஒரு சுடரைப்போல என்னுடன் அலைந்து கொண்டே இருக்கிறது. அப்பாவின் கதையை ஒரு நாவலாக்க வேண்டும் என்பதுதான் அது. அப்பா பிறக்கப் போற நேரத்தில அப்பப்பா ஓடிப்போய் வைரவர் கோயில்ல ஒரு சுடர் ஏற்றினவராம் "நல்ல பிள்ளையாப் பிறக்கோணும் எண்டு" அப்பா செத்த அண்டைக்கு அவற்ற தலைமாட்டில ஒரு சுடரை ஏத்தி நாங்க வைச்சனாங்கள். அந்தச் சுடரில் இருந்து இந்தச் சுடர் வரைக்குமான அப்பான்ரை வாழ்க்கை, அந்த இருளை வெளிச் சத்திற்கு கொண்டுவர எத்தனையோ நாளாக நானும் முயல்கிறேன்.

தூண்டிற் புழுவினைப் போல
வெளியே சுடரினைப் போல்
நீண்ட பொழுதாக என்
நெஞ்சம் துடித்ததடி

என்று பாரதி காதலில் பாடியது என் நாவலிற்கும் பொருந்துவதாய் உள்ளது. ஒரு கொப்பியை இதற்கென்றே எடுத்துவைத்தேன். எழுதத் தொடங்கினேன்தான். ஆனால் அது சில நேரம் கட்டுரைபோல மாறிவிடும். சிலநேரம் முயலாகும். சிலநேரம் ஆமையாகும். ஆமை வருவது வீட்டுக்குத்தானே கூடாது நாவலுக்கு நல்லதுதானே என்று சில நேரம் "ஊறட்டும்" என்று காவல் இருப்பேன். ஆனால் எழுதியவை திருப்திதராமல் போகக் கிழித்து எறியத் தொடங்கினன். வாங்கி வைத்த கொப்பியில் இன்னும் நாலு பக்கம்தான் இருக்கிறது. புதுக்கொப்பி வாங்கத்தான் வேணும்.

**ஈ)**

இரண்டு நாவல்களுமே நினைவைத் தருகின்றது. நாவல் பழம் ஒரு காலத்திற்குரியது. நாவலும் ஒரு காலத்திற்குரியதுதான். பொக்கற்றுக்க வைச்சு நான் நாவல்பழம் சாப்பிட்டதாலேயோ என்னவோ நாவலிலும் பொக்கற் நாவல் இருக்குது பாருங்கோ. எங்கன்ரை பக்கத்து வீட்டில முன்னுக்கு ஒரு நாவல் நிண்டது. அதை ஒரு அளவோடு வெட்டி அந்த நாவல்ல ஜம்புமரத்தை ஒட்டுக் கன்றாக்கி இப்ப நல்லாக் காய்ச்சுக்கொட்டுது. நானும் நாவல ஒட்டுக் கன்றாக்கி சிறுகதை, கவிதையாவது எழுதுவம் எண்டு பாக்கிறன்.

# மலன்

**அ)**

என்னிடம் இருந்த அந்தக் குட்டிச்சைக்கிள் எனக்கு முருகனின் மயில் போன்றது. ஐந்தாம் ஆண்டில் படிக்கும் போது அந்தச் சைக்கிள் என்னிடம் இருந்தது ஒரு பெரிய கௌரவம் போல் இருந்தது. என்னோட படிச்ச பெடியள் பெரும்பாலும் நடந்துதான் வாறவங்கள். எனக்கும் நடக்க விருப்பம். "கந்தப்பு வீட்டுக்கள்ளு என்னைச் சுவரோட மோதச் சொல்லுது" எண்டு சொல்லிக்கொண்டும் "புறும் புறும்" என்று கையை நீட்டி முறுக்கிக்கொண்டும் வேலியோட மோதி கறையானைத் தட்டிக்கொண்டு பிறகு நேராய் ஓடியும் நடந்தும் இளைச்சும் பிறகு வெட்டைக்கு வந்து புளியம் பூவை ஆய்ஞ்சும்... செம்பழத்தைக் கல்லால விழுத்தியும் தின்றிட்டு வீட்டபோறதில ஒரு புளுகம் இருக்கும். சைக்கிள்ளதான் அன்றைக்குப் பள்ளிக் கூடம் போனனான். திரும்பிவரேக்க ஆதவன் நிண்டான்.

"எடேய் நான் சைக்கிள் ஓடட்டே" எண்டான். அவனுக்குச் சைக்கிள் ஓட விருப்பம். அவனுக்குச் சைக்கிள் ஓடவும் தெரியும். மாட்டன் எண்டு சொல்லமுடியாமல் தடுமாறினேன். அவன் ஓடத் தொடங்கினான். . என்னைவிட அவன் கட்டை எண்டதால அரைஞ்சு அரைஞ்சு ஓடினான். என்ன அவசரத்துக்கு இண்டைக்கு இவர் என்னோடே வாறார் எண்டு யோசிச்சுக்கொண்டு முழங்கால் இடிபட கான்ரில்ல இருந்தன். வெட்டைக்குக் கிட்டப் போக ஏதோ சரியா மணக்கத் தொடங்கியது.

இதென்னெடா மணம் எண்டு மூக்கு முறிஞ்சு போச்சு. இவர் ஏதும் பிலாக்கொட்டை திண்டிட்டு வந்து நசுக்கிப் போட்டாரோ எண்டு நினைச்சன். வெட்டையடியில சைக்கிள

நிப்பாட்டினான் ஆதவன். சைக்கிளால இறங்கி விறுவிறு வென்று நடந்து போனான். இதென்னடா அவன்போன பிறகும் மணக்குது எண்டிட்டு சைக்கிளப் பாத்தன். சிவத்தச் சீற்றில தண்ணியப் பூசி மஞ்சள் அரைச்சமாதிரி கிடந்தது. எனக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அவன் என்ரை கண்ணில இருந்து மறைஞ்சான்.

**ஆ)**

இண்டைக்கு ஏ.எல் சோதினை தொடங்குது எண்டது காலமை எழும்பும்போதே பெரிய ஆரவாரத்தை ஏற்படுத்தியது. மத்தியானம்தான் சோதினை என்பது கொப்பியை இன்னும் ஒருக்காத் திறந்து பார்க்கலாம் என்ற ஊக்கத்தைத் தந்தது. எல்லாம் படிச்சு முடிஞ்சிது மாதிரியும் முடியாத மாதிரியும் இருந்தது. காலைமையில மெல்லிய இருட்டோட இருக்கிற வெளிச்சம் மாதிரி மனம் இருந்தது. அம்மா காலைமையே குசினிக்க ஆரவாரமா இருந்தா. எனக்குச் சோதினை எண்டா மனிசிக்கும் நித்திரை வராது. தேத்தண்ணியைத் தந்தா. பல்லுத் தீட்டுற யோசினையே இல்லாமல் குடிச்சன். கொஞ்சத் தால சாப்பாட்டக் கொண்டந்து வைச்சா. பாக்க நாவூறிச்சுது. பால்புட்டு. எனக்குச் சின்னனிலே இருந்தே பால்புட்டு எண்டா சரியான விருப்பம். இண்டைக்கு விருப்பமாச் சாப்பிடட்டும் எண்டு தந்திருக்கிறா. நான் சாப்பிடத்தொடங்கினன்.

குசினிக் கதவோட நிண்டு அம்மா என்னைப் பார்த்துக் கொண்டு நிக்கிறது தெரிஞ்சது. சோக்காத்தான் இருந்தது. எல்லா இடமும் இனிக்கிறமாதிரி இருந்தது. சாப்பிட்டுக்கொஞ்சத்தால எனக்கு வயித்தை முறுக்கத்தொடங்கியது. ஒருக்கா இல்லை நாலு தரம் எழும்பிப் போய் வந்திட்டன். எனக்கு அம்மாவில கோபம் கோபமா வந்திது. “சுத்துகிறார் அத்தான் சுழலுகிறார் சுப்பற்ற கொல்லயுக்கை” எண்டது மாதிரி நான் சுத்திச் சுழன்று கொண்டு நிண்டன். கோப்பி போட்டுத் தந்தா. சரிவரயில்ல. மத்தியானம் சோதினைக்குப் போன மாதிரித்தான் எண்ட நினைப்பே இன்னும் வயித்தைக் குலுக்கத் தொடங்கியது. அத்தை சொன்னா “அரோட்டுமா” எண்டா நல்லது எண்டு. நானே சைக்கிள எடுத்துக் கொண்டு கீசினன். அரோட்டு மா எல்லா வாசலிலயும் அடைப்பை ஏற்படுத்தி இருக்கோணும். பிறகு ஒரு மூச்சும் இல்ல. சந்தோசமா சோதினைக்குப் போனன். வீட்டில தொடங்கின கலக்கிறது சோதினையில கலக்குவதற்கான நல்ல ஆரம்பமாக அமைந்தது.

இ)

பெஸ்ற் இயரின்ரை செக்கன்ற் செமிஸ்ரர் எக்ஸாம் தொடங்கிட்டுது. காலைமை எழுதிப் போட்டு றூமுக்க வந்திருக்கேக்க, போனில வந்த செய்தி தலையைச் சுத்த வைச்சது. மூன்று பேருக்கும் என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல. சாரங்கன் ஒரு கிறுங்கன். அவன் மட்டும் பல்லக் காட்டிக்கொண்டு நிண்டான். பின்னேரம் இன்னொரு எக்ஸாம் இருக்கிறதாம். எங்கயடா வாய் பாத்தனாங்கள் எண்டு நினைக்கவே தலைசுத்திச்சுது. ஒருவரும் ஒண்டும் கதைக்கேல்ல. படிச்ச விசயங்கள்தானே எண்டு மனசைத் தேற்றத்தெரியேல்ல. எனக்கு வயித்தைக் கலக்கிச்சுது. போய் இருந்தன். அங்கையும் ஒரே பதட்டமா இருந்தது. வாளித் தண்ணியை எடுத்துத் தகரத்திலே எறிஞ்சன். ஒவ்வொரு துளியும் ஒரு சித்திரத்தைக் கீறத் தொடங்கீச்சுது. உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறது ஆறுதலாய் இருந்தது.

“குதிரை மாதிரிக்கிடந்தது. பிறகு குதிரைக்குப் பக்கத்தில சிறகு கிடக்கிற மாதிரியும் கிடந்தது. அந்தச் சிறகு ஒரு பறவையாய் மாறி பல பறவைகளாய் மாறத் தொடங்கியது. ஆக்கள் எல்லாம் மூட்டை முடிச்சுகளோட இடம்பெயர்ந்து போறது மாதிரியும் கிடக்குது.”

திடீரென்று மழைபெய்யத் தொடங்கியது. என்னடா இது வில்லங்கம் எண்டு பாத்தாத் தகரம் எல்லாம் தண்ணி ஊறி வழிஞ்சு சித்திரங்கள் முழுமையாகக் கரையத் தொடங்கியன. மனம் ஒரு மாதிரிப் போய்விட்டது. மழையுக்க நனைஞ்சுகொண்டு “நேரம் போகுது” எண்டு றூமுக்க ஓடினன்.

ஈ)

இதை எழுதும் போது பெருமாள்முருகனின் “பீக்கதைகள்” என்ற சிறுகதைத் தொகுதி ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

மனதிற்கும் உடலிற்கும் இடையில் தீராத முடிச்சுகள் இருந்துகொண்டே இருக்கின்றன.

மனம் உடலிலும் உடல் மனதிலும் விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றன. எனினும் சில நெருக்கடிகளில் பாறைக்குள் இருந்து பசிய இலைகள் தலைகாட்டு கின்றன. சமயங்கள் மலம் அற்றவனாக இரு என்கின்றன.

இறைவனை நிர்மலன் என்றே சொல்கின்றோம். மனிதர்கள் மலனாக இருந்தே ஆக வேண்டும்.

எனது எமது என்ற உணர்வு முக்கியமானது. அந்த உணர்வு இல்லாததனாலேயே பல இழப்புகளை சாதாரணமாகக் கண்டு கொண்டு வருகின்றோம். எல்லாவற்றையும் "நான்" என்பதுடன் முடிச்சுப்போட்டால் விழிப்பும் எழுகையும் சாதாரணமாக வந்து விடும். சாதாரணமாகக் கடந்துபோகும் சாத்தானை எம்முடன் அழித்து நான் என்பதில் இருந்து விழிப்புக்காணத் தொடங்கினால் எல்லாவற்றிலும் அக்கறை தொடங்கிவிடும். அர்த்தமும் நீண்டிடும்.

# துப்பாக்கிகளும் அப்பாவிகளும்

**அ)**

*வீட்டின் பின்புறம் இருந்த அறையில் அந்த வாங்கிலைக் கண்டேன். அந்த வாங்கிலில் அப்பா மட்டும் தான் படுத்திருப்பார். அவர் இருக்கும்வரை யாரையும் அதில் இருக்க விடமாட்டார். அவர் இறந்த பிறகு அந்த வாங்கிலில் தான் அவரைக் கிடத்தியிருந்தோம். அப்பா இல்லை என்றான பிறகும் அந்த வாங்கிலில் எங்களால் இருக்க முடிய வில்லை. அப்படியே அந்த வாங்கில் இடம் பெயர்ந்து விட்டது. அந்த வாங்கிலில்தான் ஆமி சுட்டுச் சாக்காட்டின இரண்டு அத்தான்மாரையும் (அப்பாவின் தமக்கையின் பிள்ளைகள்) அப்பாவும் மற்ற ஆக்களும் சேர்ந்து தூக்கி வந்தவையாம். அப்ப நான் பிறந்து பத்துமாதம் (28.4.1985) வீட்டடியால சைக்கிள்ல போன ஒருவர் "ஐயோ ஆமி வாறாங்கள் ஆமி வாறாங்கள்" என்று சொல்லி ஓடியிருக் கிறார். இதக் கேட்டுப் பயந்து போன இரண்டு அத்தான்மாரும் ஓடியிருக்கினம். எங்கேயோ எல்லாம் வெடிச்சத்தம் கேட்க தோட்டத்திற் குள்ள ஒளிஞ்சிருக்கினம். பதுங்கிப் பதுங்கிக் கடைசியா ஒளிச்சது மரவள்ளித் தோட்டத்திற்குள்ள. மரவள்ளியின் கீழ் இலைகள் எல்லாம் உதிர்ந்திருந்தன. எங்கிருந்தோ இவையைக் கண்டு ஓடிவந்த ஆமிக்காரர்கள் "கொட்டியா கொட்டியா" என்று சொல்லிக் கொண்டு ஒரு அத்தானுக்குக் காதிலும் இன்னொரு அத்தானுக்குப் பிடரியிலும் வெடி வைச்சிருக் கிறான்கள். ஊரிலும் ஆங்காங்கு பலரை அவ்வாறு சுட்டுத் தள்ளியிருந்தார்கள். அண்டைக்கு இந்த வாங்கிலில் அவர் களைத் தூக்கி வந்த பிறகு அப்பா இதில் மட்டும்தான் படுப்பாராம்.*

ஆ)

2006 பாதை பூட்டிய பிறகு எனக்கு நூலகமே தஞ்சமாக இருந்தது. நெல்லியடியில் அமைந்திருந்த அந்த நூலகத்தில் ஒவ்வொரு நாளும் புத்தகங்களை எடுத்து வாசிப்பேன். புத்தகங்கள் மட்டுமே ஆறுதலாக இருந்தன. அன்றைக்கும் அப்படித்தான், நூலகத்திற்குச் சைக்கிளைத் திருப்பிய வேளை, அடுத்த ஒழுங்கை யில் இருந்து முளைத்த ஆமிக்காரன் ஒருவன் என்னை அழைத் தான். நான் சைக்கிளால் இறங்கினேன்.

"ஐ.சி யை எடு" என்றான்.

கொடுத்தேன்.

அப்படியே வாங்கிப் பொக்கற்றுக்குள் வைத்துவிட்டான்.

"பின்னேரம் காம்பிற்கு வா" என்றான்.

"சேர்" "சேர்"என்று சேறாக்கியும் அவன் மசியவில்லை.

என்ன செய்கிறாய்? என்றான்.

கம்பஸ் என்று சொல்வதைத் தவிர்க்கப் பார்த்தேன்.

ஆனால் கம்பஸ் என்றேன்.

கம்பஸ் என்றால் நீ புலிதானே என்றான்.

படிப்பிலேதான் நான் புலியென்று சொல்லமுடியுமா?

இல்லை சேர் இல்லைசேர் நான் அப்படியில்லையென்று சொன்னேன்.

அவன் திடீரென்று தன் துப்பாக்கியை என் நெஞ்சில் வைத்தான்.

எனக்குக் கண்கள் இருண்டன. கண்களில் இருந்து என்னையே எரித்துவிடும் இரண்டு நீர்த்துளிகள் சிந்தின.

என்ன நினைத்தானோ அதே துப்பாக்கியால் என்னைத் தள்ளிவிட்டு "ஐ.சி"யைக் கையில் தந்தான்.

பூனையின் விளையாட்டில் நான் எலியானேன்.

இ)

அது ஒரு ஆர்ப்பாட்டம். பல்கலைக்கழகப் பேராசிரியர் களும் மாணவர்களும் ஒன்றாகத் திரண்டிருந்தோம். கைகளிலே பதாகைகள். எங்கும் துண்டுப்பிரசுரங்கள். ஓயாத ஒருமித்த குரல்கள். பரமேஸ்வராச் சந்தியை நோக்கி வெள்ளம் நகர்ந்தது. இராணுவமும்

பொலிசாரும் திரண்டிருந்தார்கள். அவர்கள் மறித்ததை யாருமே பொருட்படுத்தவில்லை. திடீரென்று துப்பாக்கிக் குண்டுகள் கேட்டன. எல்லோரும் சிதறி ஓடினார்கள். திரும்பிப் பார்த்தேன். செருப்புகள், பதாகைகள், பொருட்கள் அந்த வீதியெங்கும் சிதறிக் கிடந்தன. ஒரு பேராசிரியரும் சில மாணவர்களும் காயமடைந் திருந்தனர். வானத்தை நோக்கிய குண்டுகளுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை என்றோ இரத்தம் சிந்தினால்தான் இவங்கள் சிதறுவாங்கள் என்றோ அவர்கள் நினைத்திருக்கலாம். சிதறியதும் பதறியதும் உண்மைதான். ஆனால் இன்னும் இன்னும் ஆக்ரோசமும் நீதிக்கான குரலும் துடித்துக்கொண்டிருந்தன. எப்பொழுதும் எங்கள் உரிமைக் குரல்கள் அந்த வீதி முழுவதும் நிறைந்துகிடந்த செருப்பு களைப் போலவே சிதறிக்கிடக்கின்றன.

ஈ)

துப்பாக்கிக் குண்டுகள் வெறுமனே உடலை மட்டும் துளைத்துச் செல்பவை அல்ல. இராமனின் கணை ஏழுமரங்களைத் துளைக்க வல்லதாம். அதைவிடவும் இந்தத் துப்பாக்கி ரவைகள் கொல்லப்படுபவர்களின் உடல்களையும் தாண்டி, அவர்களை நம்பியிருப்பாவர்களின் மகிழ்வைக் காலம் பூராவும் சிதறடித்து விடுகின்றன. அவை கனவுகளை, பரம்பரைகளை, இலட்சியங் களை, மகிழ்ச்சியின் வேர்களை துளைத்துச் செல்கின்றன. துளைப்பவர்களை விடவும் இருப்பவர்களையே அவை அதிகம் அதிகமாய் இன்னும் துளைக்கின்றன. மனச்சிதைவிலும், மனக்காயத்திலும், காயங்களிலும் அந்தவலிகள் பரம்பரை பரம்பரையாகத் தொடரவே போகின்றன. ஆனால் இவையெல்லாம் ரவைகளை உமிழும் துப்பாக்கிகளுக்குத் தெரியப் போவதில்லை.

# நெருக்கடி: குழந்தையாக மாறுதல்

**அ)**

*நானும் மனைவியும் செல்வச்சந்நிதி கோயிலுக்குத் தயாரானோம். கந்தசஷ்டி விரதம். பின்னேரம் 4 மணிக்குப் பூசை. அலு வலகத்தில் இருந்து குறுநேரவிடுமுறையில் வந்திருந்தேன். கதைத்துக் கொண்டே மெதுவாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தினேன். எல்லோரும் ஏதோ அவசரத்தில் விழுந்தடித்து ஓடிக்கொண்டிருப்பதாய் எனக்கொரு பிரமை. நாமும் வெளிநாட்டுக்காரர் போல இயந்திரம் ஆகி விட்டோம். வானத்தை நிமிர்ந்து பார்க்கவும் அலையலை யாய்த் திரளும் மேகங்களைப் பார்க்கவும் அதில் ஒவ்வொரு கணத்திலும் உற்பத்தியாகும் ஒவ்வொரு விலங்கையும் பறவையையும் பார்ப்பதிலும் மேகத்திரளில் மெல்ல மறைந்து சிவந்த ஒளியூட்டும் பொன்மாலைப் பொழுதையும் இழந்து வருகிறோம் என நான் நினைப்பதுண்டு. விரதம் என்பது மனதில் உருவாக்கியிருந்த வித்தியாசமான அமைதி ஒரு ஒத்தடமாய் அமைய த்ண்ணீரையும் துறந்த உடலில் ஒரு குளிர்மை உயிர்ப்போடு இருந்தது. எத்தனையோ காட்சி களை, மனிதர்களை விலத்தியபடி கோவிலை அடைந்தோம். மனைவி முதலில் இறங்க தலைக்கவசத்தைக் கழட்டியபடி இறங்கிய நான் அதிர்ந்து போனன். "எங்கயப்பா ஹெல்மட்?" என்றேன். தலையைத் தடவியபடி ஆள் ஒரு சிரிப்புச் சிரித்தா. அதைப் பற்றிய சிந்தனை இல்லாததால் நெல்லியடி, வல்லை என்று மெயின் றோட்டிலயே எந்தப் பயமும் யோசினையும் இல்லாமல் வந்திருந்தம் என்று நினைக்கச் சிரிப்புச் சிரிப்பா வந்தது. கோவிலைக் கும்பிட்டுக் கிம்பிட்டு வெளிக்கிட்டது முதல் எங்க பொலிஸ் நிற்பானோ நிற்பானோ என்று*

முழிசியபடி பயந்த படியே வீட்டுக்கு வரவேண்டியிருந்தது. வானத்தின் கருமேகங்கள் எல்லாம் அணித்திரண்டு நின்ற மனநிலையே என்னுடன் இருந்திருந்தது.

**ஆ)**

சூரன் போர் இப்போது தொடங்கப் போகிறது. இது ஏன் முருகன் போர் என்று அழைக்கப்படவில்லை என்ற தேவையற்ற சிந்தனை மனதில் திடீரென்று எழுந்தது. கடவுளுக்கும் அரக் கருக்குமான போர் மனிதர்களால் வடிவாக நிறைவேறிக் கொண்டி ருந்தது. சனத்தின் எண்ணிக்கை வரவர அதிகரித்துக் கொண்டே இருந்தது. சூரனின் தலையும் சனங்களின் தலையும் படக்கென்று கண்ணில்பட்டுக்கொண்டே இருந்தன. வடக்கு வீதியில் பெரும்போர் நீண்டநேரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோவில் முன் பகுதியை நோக்கிச் செல்லத் தீர்மானித்தேன். சிலர் கொண்டு வந்த பழத்தையோ ஏதோவொரு உணவையோ சாப்பிட்டுக் கை கழுவிக்கொண்டிருந்தார்கள். இளநீரைச் சிலர் குடிப்பதும் சிலர் கோம்பை வழிப்பதும் கண்களில் பட்டது. முன்னுக்கும் நிறையச் சனம். இருவர் கோவிலின் மேல் ஏறி அந்த மாமரக்கொப்பைத் தயார்ப்படுத்தத் தொடங்க கீழிருந்த சனங்களில் மெல்லிய ஆரவாரம் தொற்றத் தொடங்கியது. சிலர் மாங்கொப்பைப் பார்த்தபடியே நகர்ந்து வரத் தொடங்கியிருந்தார்கள். என் இலக்கும் உண்மையில் மாங் கொப்பில் இருந்தது. ஒரு மாங்காயோ இலையோ சிறு தடியோ கூடக் கைப்பற்றி விடவேண்டும் என்ற எண்ணம் பலரில் தொற்றி யிருப்பது ஆரவாரத்தில் இருந்து புலனாகியது. ஆணவம் அழியும் தருணம் காண வந்தோம் அல்லவா? சூரன் மாமரமும் சேவல் கொடியுமாகிவிட நாம் சூரனாகப் பார்க்கின்ற விந்தை என்ன என்று மனதைக் கண்டித்துக்கொண்டேன். இதோ இப்போது முருகனின் வேல் மாமரமாய் நிற்கும் சூரனைப் பிளக்க சேவலும் கொடியும் ஆகும் தருணம் நிகழப்போகின்றது. எல்லோரின் கைகளும் கால்களும் உறுதி பெற்றுக்கொள்ள எதிர்பாராக் கணத்தில் நினையா இடத்தில் மாங்கொப்பு சென்று விழுகின்றது. ஆட்களை ஆட்கள் விழுத்தியபடி ஓடுகின்றார்கள். சமுத்திரமொன்று போத்தலுக்குள் அடைக்கப்படப் போகிறதோ என்ற உணர்வு. ஆனால் என்கால்களும் பின்வாங்கிவிட வில்லை. ஒரு கிழவியின் ஓலம் எழுகின்றது. யாரோ அவவை விழுத்தி மிதித்து இருக்கவேண்டும். சிலர் தூக்கிவிட கிழவி வேதனையோடு திட்டித் தீர்த்தபடி எழுந்தாள். மாங்கொப்பு விழுந்த

இடத்தில் எல்லோரும் மண்ணை கைகளால் அரித்துக் கொண்டிருந் தார்கள். சிறிய இலை, தடியாவது மண்ணில் விழுந்திருக்குமோ, மறைந்திருக்குமோ என்று ஓயாது தேடிக்கொண்டிருந்தார்கள். என் கண்களும் நிலத்தில் துளாவித் திடீரென ஒளிர்ந்தது. ஒரு சிற்றிலையின் சிதைந்த வடிவம் என்கையில். திடீரென அது இலையாகி கிளையாகி மாமரமாகி என்னோடு ஒட்டிக்கொண்டது. என் தலை நல்ல பாரமாக இருக்கிறது. ஏன் நான் சூரனாகிவிட்டேனா? கையில் கண்ணாடி இல்லை என்பதால் ஒருக்கா என்னைப் பார்த்துச் சொல்லுங்கோ? நான் யாராய் மாறி இருக்கிறேன்.

**இ)**

செல்வச் சந்நிதித் தேர். தேர் முடிஞ்சு வீடு திரும்பும் போது கால்களைக் கீழே வைக்க முடியுமா என்று சந்தேகம் எழும் அளவுக்குத் அவ்வளவு சனம். நான் மகளைத் தூக்கியபடி நடந்து கொண்டி ருந்தேன். எனக்கு வேட்டி அவிழ்கிறது போன்றும் ஒரு உணர்வு. கரை யேறும் போது வேட்டி இருக்கவேண்டும் என்று முருகப்பெரு மானிடம் விண்ணப்பம் வைத்துக்கொண்டே நடந்தேன். பழனி ஆண்டவர் தன்னைப் போல் அழகு பார்த்து விடுவாரோ என்று குறும்புக் குமரன் மீது ஐயம் இருக்கவே செய்தது. மலிவு மலிவு என்ற ஓயாக்குரல்களும் கேட்டபடி இருந்தன. நடந்துகொண்டே குளிக்கும் பேற்றினை அடைந்து கொண்டிருந்தேன். மகள் இன்னும் தன்னைத் தோளில் தூக்கச் சொன்னாள். அப்பா! பலூன், டோறா போன், கிளிப், ஊதப் பறக்கும் குமிழ் என்று காட்டிக் காட்டிக் கேட்டுக் கொண்டே இருந்தாள். அழத் தொடங்கினாள். என்னை உருட்டிவிடத் துடித்தாள். அங்கால போய் வாங்கித் தாறேன் அம்மா என்றேன். அவள் அழத் தொடங்கினாள். கண்ணும் மூக்கும் மடைதிறந்தன. திரும்பிப் போய் அதை வாங்கு இதை வாங்கு ஊத்தை அப்பா லூசு அப்பா என்று கதைவேறு மாறத் தொடங்கியது. யாருடையதோ சாறியில் மிதித்துவிட்டேன் முன்னால போய்க் கொண்டிருந்தவ அப்பிடியே பின்னால திரும்பி வரவேண்டி இருந்தது. சிரிக்கக்கூட முடியவில்லை. என்னடா சனம் என்று ஏங்கி நடந்தேன். மகள் அப்பா ஐஸ்கிறீம் என்று வேறு அழத் தொடங் கினாள். அவளுக்குச் சுத்திவந்த சனமோ என்ர ஆக்கினையோ விளங்கவே இல்லை. மணிக்கடைகளும் மற்றக் கடைகளும் மட்டுமே அவள் கண்களில் விழுந்துகொண்டிருந்தன.

**ஈ)**

*நெருக்கடிகளில் நாம் எப்படி இருக்கிறோம். நெருக்கடி எம்மால் வருகிறதா? சூழலில் இருந்து மனதிற்கா? மனதில் இருந்து சூழலுக்கா நெருக்கடி பாய்ந்து வருகின்றது? சில நெருக்கடிகளில் குழந்தையாகவும் மாறவேண்டும். மனம் என்பது தளம்பும்போது சூழல் எதிரியாகி மனதைத் துளைத்துவிடுகின்றது. மகிழ்ச்சியை யும் தொலைத்துவிடுகின்றது. நெருக்கடிகளில் இந்த உலகத்து வனப்பைத் தவறவிடுகின்றோம். உதட்டில் சிறு புன்னகை பொருத்தியபடியே நகர்வோம். இடுக்கண் வருங்கால் நகுக என்று வள்ளுவன் சும்மாவா சொல்லி இருப்பான்?*

# சோதிடம் ஒரு திடம்

**அ)**

**1997**

எனக்கு அந்தத் தோட்டவெளியின் காத்தும் அமைதியும் தடக்கிவிழச் செய்யும் வரம்புகளும் குளிர்ந்து காலைச் சிலிர்க்கவைக்கும் புற்களும் பரவசம், பரபரப்பு, பயம் என்று அலைவரிசைகளை மாற்றிக்கொண்டிருந்தன. தோட்டக்கரையோடு அந்த வைரவர் கோயில் இருந்தது. கனக்கச் சனம் நின்றார்கள். வெண்பஞ்சாய்ப் போன தலையுடன் கொஞ்சம் உயர்ந்த அந்த மனிசியை எல்லோரும் பயபக்தியோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவவின் கையில் அவ அளவு உயரமான தடியொன்று இருந்தது. அதை ஊன்றி ஊன்றி அவ ஒரு பயங்கர நடனமொன்றை ஆடினா. எல்லோரும், எழுபதைத் தாண்டிய அந்த மனிசியின் ஆட்டத்தை பக்தியோடு வியந்துநின்றார்கள். பிறகு தடியை ஊன்றியபடி நடந்து கோயில் விறாந்தையில் இருந்தா. ஒரு வட்டமாய் எல்லோரும் அவவைச் சுத்தி இருந்தம். என்னைக் கூட்டிக்கொண்டு வந்த மணியக்காக்குப் பக்கத்தில் நான் இருந்தேன். வரிசை என்று ஒன்று இல்லை. அவ யாரை நோக்கித் தடியால ஓங்கித் தரையில அடிக்கிறாவோ அவை தங்கன்ர பிரச்சினையைச் சொல்ல வேண்டியதுதான். சிலரைப் பார்த்து அவ கோபப்பட்டா. எழும்பித் தடியை ஊன்றி ஒரு வெறித்த பார்வையும் பார்த்து ஏதோ சொல்லிக் கத்தினா. திரும்பிப் பார்த்தன். தோட்டம் எல்லாம் இருட்டாய்த் தெரிந்தது. பயத்தில கண்ண இருட்டிற மாதிரிக் கிடக்கு. எனக்குக் கொஞ்ச நாளா நெஞ்சுச் சளியால ஒரே இழுப்பு. படுக்கேலாது, நடக்கேலாது, நிமிர்ந்து கூட இருக்கேலாது

*ஒரு இசை வாத்திய மாய் நான் ஆகியிருந்தேன். அதன் ஆக்கினையை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. மணியக்காதான் “இவவிட்டப் போனா நல்லது அவ திருநீறு போட்டு ஏதும் சொல்லுவா அதக்கேட்டு நடந்தா நல்லது” எண்டு சொன்னா. அம்மா மணியக்காவோட என்னை அனுப்பியிருந்தா. தடி என்னை நோக்கி வந்து விழுந்தது. வெண்தலையும் அந்தக்கண்களின் ஒளியும் கோயிலின் ஒளியும் உண்மையாகவே அம்மனாச்சி மாதிரி அவவைக் காட்டிச்சு. ஆமணக்கம் எண்ணையுக்கை கதலிப்பழத்தை இரவு ஊறவைச்சு காலைமை சாப்பிட்டா இது மாறிப் போயிடும் எண்டு அமைதியாச் சொல்லிப் போட்டு தடி வேறு திசையில் விழுந்தது. ஆமணக்கு எண்டதும் பாரதி சொன்ன தாக யாரோ சொன்ன “கணக்கு எனக்குப் பிணக்கு ஆமணக்கு” ஞாபகம் வந்தது. அம்மா ஆமணக்கு எண்ணையுக்கை கதலியை ஊறவைச்சு காலைமை எடுத்த போது அதைப் பாத்த உடனேயே எனக்கு குமட்டிக் கொண்டு வந்தது. அடுத்தநாள் மணியக்கான்ரை செந்தில் அண்ணா என்னடா வாக்கில உனக்கு பதினெட்டுவயதில கலியாணம் என்று சொன்னவவாம் எண்டு கேட்க நான் சிரிக்க, வெட்டை முழுவதும் ஊர் முழுவதும் என் பதினெட்டுவயதுக் கலியாணக் கதை பரவியது. பதினெட்டுவயதைத் தாண்டும் வரை அது நீடித்தது. பத்தொன்பது வயதானதும் எனக்குக் கூடக் கவலை வந்தது எண்டா நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்*

**ஆ)**

**1998**

*1995* இடப்பெயர்வோடு வடமராட்சிக்கு வந்த ஒருவர், எங்கள் அம்மனடியில் வாக்குச் சொல்லத் தொடங்கினார். அங்கே இருந்த அம்மனாச்சிக்கு அது பிடிக்கவில்லைப் போல் இருந்தது. தன்ரை கொட்டிலை விட்டு அவ வெளியில வாற தில்லை. அவ வாக்கைப் பாட்டாலதான் சொல்லுவா. சிலருக்கு விளங்கும் சிலர் விளங்கியது போலத் தலையாட்டுவினம். இப்ப புதிதாக வந்த அவர் ஒவ்வொரு புதனும் வெள்ளியும் வாக்குச் சொல்லத் தொடங்கினார். அவர் வசனமாகத்தான் சொல்லுவார். ஆணாகிய அவரை எல்லோரும் அம்மன் என்றுதான் கும்பிட்டார்கள். எனக்கும் ஒரு பயபக்தி இருந்தது. இரண்டு கிழமைக்கு முன் கொடுத்த தேங்காய் திரும்பக் கொண்டுவரும் போது பூஞ்சனம் போல ஏதோ பிடித்திருக்கும். அதைக்கொண்டு வந்தவர்கள் முகம் பேயறைந்ததாய் மாறி இருக்கும். தேசிக்காய்களை வெட்டிக் காய்வெட்டிவிடுவார். அன்று வெள்ளிக்

கிழமை. நான் அம்மம்மா என்று அன்போடு அழைக்கும் உறவில்லாத எங்கள் வீட்டோடு நெருக்கமான அவவுடன் அம்மனடிக்குப் போனேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினையைச் சொல்லி அழுதுகொண்டிருந்தார்கள். அம்மனும் ஏதோ ஏதோ தீர்வுகள் சொல்லிக்கொண்டிருந்தா. அம்மம்மா தானும் ஒரு பிரச்சினை கேட்கப்போறன் எண்டா. என்னை ஏதும் கேட்கப்போறியோ எண்டா? நான் இல்லை என்று தலையை ஆட்டினேன். இவ வெளி நாட்டுக்குப் போறதைத்தான் கேட்பா எண்டு நான் அங்கால நிண்ட வாழைகளைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். "அம்மா என்ரை புதுச் செருப்பு நேற்றுத் தொலைஞ்சு போச்சு. ஆர் எடுத்திருப்பினம் எண்டா" அம்மனும் வீட்டுக்கு வாற நாலுபேற்ற முதல் எழுத்தைச் சொல்லச் சொன்னா. "க, இ, சி, பா" என்று அம்மம்மா சொல்ல அம்மன், "க" என்று சொன்னா. எனக்கு படக் கெண்டு ஒரு மாதிரிப் போட்டுது. எனக்கு அவவைப் பாக்க ஒரு மாதிரிக்கிடந்தது. இரண்டு பேரும் வீட்ட நோக்கிப் போகேக்கை ஒண்டும் கதைக்கேல்ல. வீட்டுக் கேற்றைத் திறந்து போக ஒற்றைச் செருப்பு வேப்பமரத்தடியில கிடந்தது. கறுப்பன் தான் விளையாட்டுக் காட்டி இருக்கிறார். "க" என்பது என் அம்மா அல்ல என்று கறுப்பனே என்று சமாதானம் ஆகினோம். அதுக்குப் பிறகு சந்தோசமா அம்மம்மா தந்த எள்ளுப்பாவைப் சாப்பிடத் தொடங்கினன்.

**இ)**

**2002 புரட்டாதி**

அவவிடம் நிறையப் பேர் காவல் இருந்தார்கள். நானும் கிட்டுவும் அங்கு இருந்தோம். சாத்திரம் கேட்க வந்த ஒவ்வொருவரின் பிரச்சினைகளும் அனுமானின் வால்போல் நீண்டு கொண்டே இருந்தது. எங்கள் முறை வந்தது. என் குறிப்பைக் கொடுத்தேன். யாருடையது என்று கேட்டா, நான் அண்ணாவின்ரை எண்டேன். பார்த்துக் கொஞ்சத்தால சொன்னா, இவன் இந்த மார்கழிக்குள்ள இயக்கத்துக்குப் போடுவான் எண்டு. எனக்கு ஒரு மாதிரிப் போட்டுது. வாய்வீரம் மட்டுமே உள்ள நானாவது இயக்கத்துக்குப் போறதாவது எண்டு எனக்குச் சிரிப்பு வாறமாதிரியும் இருந்தது. நான் கேட்டேன், இவன் கம்பசுக்குப் போவானோ எண்டு. "இல்ல நிச்சயம் போகமாட்டான். இயக்கத்துக்குத்தான் போவான்" என்று மேசையில் அடிச்சுச் சொன்னா. இது அண்ணான்ரை இல்ல என்ரைதான். நான் இயக்கத்துக்குப் போகமாட்டன் கம்பசுக்குப் போவன். உங்களட்டை

வந்து சொல்லுறன் அப்ப பாருங்கோ எண்டு ஒரு வீறில கதைச்சன். அவ சொன்னா "அதையும் பார்ப்பம்" என்று. அவவைச் சந்திச்ச பிறகுதான் விளையாடிக்கொண்டு திரிஞ்ச எனக்குள்ள ஒரு இராட்சதன் புகுந்தான். பிளான் பண்ணிப் படிக்கத் தொடங்கினன். ஆனா சாத்திரத்தை நினைச்சு ஓரத்துக்க ஒரு பயம் இருக்கத்தான் செய்தது. கம்பசுக்குக் கிடைச்சோன்ன அவவுக்குப் போய்க் கன்டோஸ் குடுக்கணும் மாதிரிக்கிடந்தது. ஆனாக் கொடுக்கேல்ல.

ஈ)

சோதிடம் ஒரு விஞ்ஞானம் என்றே கூறுகின்றார்கள். ஆனால் அதைச் சொல்பவர்களில் பலர்தான் உண்மையாக இல்லை என்று விமர்சனமும் உண்டு. கிரகங்கள் பற்றிய கருத்துக்களில் உண்மைகள் இருக்கவே செய்கின்றன. சோதிடம் திடத்தையும் பயத்தையும் மனித மனங்களில் விதைத்து விடுகின்றது. அதைச் சாதகமாகப் பயன் படுத்தும் மன வல்லபம் என்பதும் முக்கியமானது. பணமே வாங்காமல் அதை ஒரு சேவையாகச் செய்யும் சிலரும் இருக்கவே செய்கிறார்கள். ஆராய்ச்சியாகவே அதைச் செய்பவர்களும் இருக்கவே செய்கின்றார்கள். நடந்ததைச் சொல்பவர்கள் நடக்கப் போவதை துல்லியமாகச் சொல்ல முடியாது என்றும் கருத்துண்டு. இன்றைய வாழ்வில் சோதிடத்தின் பக்கம் போகாமல் எம் வாழ்வே இல்லை என்றுதானே இருக்கிறது.

# நீரின்றி அமையா நினைவு

**அ)**

*1998*

*பள்ளிக்கூடம் எப்ப லீவு விடுமெண்டு நான், ஐங்கரன், கமலி காவல் இருப்பம். வகுப்பில இருக்கேக்கையும் லீவுக் கால நினைப்புத்தான் இருக்கும். அங்க இருந்துகொண்டே வெட்டையில கிரிக்கெட் விளையாடிக்கொண்டு இருப்பம். நாங்கள் மூன்று பேர்தான் விளையாட்டு வீரர்கள். வழமை யான பந்தைவிட கொஞ்சம் சிறிய கறுத்த, மண்ணிறக்கோடு ஓடிய பந்து ஒன்றே நிறையக்காலம் எங்களிடம் இருந்தது. எப்படியோ ஒரு பற் ஒன்றும் எங்களிடம் இருந்தது. கோயில் மதில் கட்டில ஒன்று எங்கன்ரை விக்கெற் ஆக இருக்கும். மழைக்காலத்தில் அந்த றோட்டால வெள்ளம் நடுவில ஓடிக் கொண்டிருக்கேக்கையும் எங்கன்ரை விளையாட்டுத் தடைப் படாது. சில நேரம் பந்து வெள்ளத்தண்ணிய எங்களில தெறிச்சும் விளையாடும். ரீசேட்டால துடைச்சுப் போட்டு எங்கன்ரை பணியைத் தொடருவம். கடும்மழையென்றால் கோயிலுக்குள்ள போய் விளையாடுவம். மதில் சுத்திக்கட்டி யிருந்தது. பெரிய புளிய மரம் குடைபிடிச்சுக் கொண்டு நிற்கும். கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடிச்சதைப் போல முருகன் எங்களுக்குப் புளிய மரத்தைக் குடையாகப் பிடிக்க நாங்கள் விளையாடுவம். பந்து மரத்தில படேக்கை தண்ணி கொட்டுப்படும். அதுக்கு ஒருக்கா நடுங்கிச் சிலிர்க்கிறதும் ஒரு அனுபவம்தான். வலது துடுப்பாட்டக் காரர் இடது துடுப்பாட்டக்காரராகவும் இடது துடுப் பாட்டக்காரர் வலது துடுப்பாட்டக்காரராகவும் விளை யாடுவம். ஆனா அதுக்க விளையாடுறதக் கண்டா பொன்னம்*

*மாக்கா பேசுவா. மதிலுக்கு வெளியில போனா அவுட். மதில்ல பட்டா சிக்ஸ் எண்டு சந்தோசமா விளையாடுவம். மழைகாலத்தில மட்டுமில்ல மற்றக்காலத்திலயும் கோயில் வளாகத்தில் விளை யாடுறதுதான் எங்களுக்கு விருப்பம். சிலநேரம் முருகன்ரை வேல்ல பந்து பட்டுடும். அப்பேக்கைதான் அது முறிஞ்சாலும் என்று பயமா இருக்கும். மழை இல்லாட்டில் வெட்டையில விளையாடிப் போட்டு தோட்டத்துக்கை எங்க பம் இறைக்குது என்று தேடிக் குளிக்கப் போவம். அது ஒரு தனிச் சந்தோசம். சில கிணத்தில தொட்டியும் இருக்கும். அதுக்கை இறங்க காற்சட்டையைத் "தண்ணி" வீங்க வைச்சு கிளுக்கிண்டி விளையாடும். ஐங்கரன் இப்ப இல்லை. அவன் செத்திட்டான். அவனை நினைச்சாலே கண்ணீர் கன்னத்தைச் சுட்டு வழியுது. வெள்ளத்தண்ணி, புளியமரத்தண்ணி, தோட்டத்துத் தண்ணி, கண்ணில இருந்து வாற தண்ணி எல்லாமே மனசுக்குள்ள இறங்கி ஓடத்துவங்குது.*

**ஆ)**

***1995***

*நாங்கள் கொஞ்சநாள் மந்துவில்ல இடம்பெயர்ந்து இருந்தம். அங்க நிக்கேக்கை எனக்குத் தம்பி முறையான கேசவன் தான் கூட்டு. அவன் மாடுகளை மேய்க்கிறதுக்குப் போவான். அவனோட நானும் போவன். அம்மா பேசுவா. நான் கேக்காதது போல அவனோட போடுவன். ஒவ்வொரு கன்றோடும் நாங்களும் கன்றாகும் போது ஒரு துள்ளல் எங்களிடம் சேர்ந்துவிடும். எவ்வளவு தூரம் நடக்கிறோம் என்பது காலுக்கும் மனசுக்கும் தெரிவதில்லை. மாடுகளை மேய விட்டிட்டு காட்டுக்கந்தசாமிக் கோயிலடிக்கு வருவம். அந்தக் கோயில் எனக்கு மிகவும் பிடிக்கும். சுத்தவர வயல், பக்கத்தில அளவான குளம், மனம் வயல்வெளி போல விரிந்து குளிர்ந்துவிடும். அந்தக்குளத்தில குளிக்கிறது எனக்கும் கேசவனுக்கும் நல்ல விருப்பம். குளத்துக்கை இறங்கி ஆசைதீரக் குளிப்பம். தண்ணி எத்தி விளையாடுவம். நாங்கள் போகேக்கை உடுப்புக் கொண்டு போறேல்ல. கேசவன் காற்சட்டையும் கழட்டிப்போட்டுக் குளிப் பான். நான் காற்சட்டை யோட குளிச்சிட்டு சேட்டையும் அதில தோய்ச்சுப் பிழிஞ்சிட்டு வயல் வரம்பில இரண்டுபேரும் கனதூரம் ஓடுவம். இரண்டு கையையும் உயரத்தூக்கி சேட்டைத் தூக்கிக் கொண்டு ஓடுவன். அந்தக்காத்தில சேட் கொஞ்சம் காயும். அதுக்குப் பிறகு சேட்டைப் போடேக்கை உடம்பில புது ஈரம் பரவும். காத்தும்*

*படும். அப்பேக்கை இருக்கிற பரவசம் வார்த்தையுக்கை வராது. இப்ப மழைகாலத்தில கொஞ்சம் காயாமல் இருக்கிற உடுப்பைப் போடேக்கை மந்துவில் ஞாபகம் உடன வந்திடும்.*

**இ)**

***2000***

*எனக்கு உடன ஒண்டும் விளங்கேல்ல. தலையைச் சுத்திறது மாதிரிக் கிடந்தது. நிமிந்து பார்த்தன். கிணத்தின்ரை இடையில வளர்ந்த ஆலின்ரை இலைக்கு இடையால அப்பான்ரை முகம் தெரிஞ்சுது. அவர் ஏங்கிப் போய் நின்றது தெரிஞ்சுது. அப்பா பிறவியிலயே கதைக்க மாட்டார். அதால அவர் என்னைப் பார்த்துக் கையைக்காட்டி அடிபட்டுதோ எண்டு கேட்டார். என்ரை இடுப்பளவுக்குத் தண்ணி நிண்டிது. தவளை ஒண்டு என்ரை இடுப்படியில மூசிமூசிப் பார்த்துக்கொண்டு நிண்டுது. மருந்துப்போத்தில் இரண்டு என்னை முற்றுகை இட்டிருந்தது. அப்பா சத்தம் போட்டிருக்கோணும் குகன் அண்ணா எட்டிப் பார்த்தார். வாளியை இறக்கினார். இடுப்பில கயித்தைக் கட்டிப் போட்டு கயித்தை கையால இறுக்கிப்பிடிக்க இரண்டு மூன்று பேர் சேத்துத் தூக்கிச் சினம். எனக்கு மூச்சு வாங்கிச்சுது. என்ன நடந்தது எண்டு ஆர் ஆரோ கேட்டினம் எனக்கு ஒண்டும் சொல்ல வரயில்ல. சைக்கிள எடுத்துக் கொண்டு வீட்ட வந்திட்டன். பம்மைப் பூட்டுறதுக்கு அப்பாவும் நானும் கிணத்தடியில போராடிக்கொண்டு நின்றம். எங்கன்ரை இறைப்பெண்டா எனக்குத் தலையிடிக்கும். பார்க்கிறவைக்கு ஒரு சிரிப்பு வேறை இருக்கும். பம் ஸ்ராட் பண்ணாது. பண்ணினாத் தண்ணி வராது. வயறைக்குலுக்கினாலும் தூக்கிப் பிடிச்சாலும் அது முக்கிமுக்கித் தண்ணி சிந்தும். பார்த்துக்கொண்டிருக்கேக்கை சினமா இருக்கும். அண்டைக்கும் தண்ணி வரயில்ல எண்டு ஏதும் வயறாலே தண்ணி இறங்குதோ தெரியாது எண்டிட்டு சாணகத்தை உருட்டித் தள்ளிப்போட்டு தண்ணியை அள்ளுறதுக்கு வாளியை விடேக்கை கிணத்துக்கட்டின்ரை பளிங்குக்கல் சறுக்கிப் போட்டுது. என்ன அதிசயம் எண்டா தலை ஈரமாய் இருந்தது. ஆனா எழும்பி நிண்டனான். நேரா விழுந்தனானோ தலைகீழா விழுந்து உடன எழும்பினனானோ எண்டு எனக்கு இண்டை வரைக்கும் புரியேல்ல. வீட்டை போய்த் தலையெல்லாம் உணத்திப்போட்டு திரும்பத் தோட்டத்துக்கு வரேக்க பம் இறைச்சுக்கொண்டு நிண்டுது. பாக்க ஆசையாய் இருந்தது. பம்மைத் தொட்டுப் பார்த்தன். அதிர்ந்து*

*கொண்டிருந்தது. கிணத்துக்க விழுந்த உடன என்ரை உடம்பும் இப்படித்தான் நடுங்கின மாதிரிக்கிடந்தது. தண்ணி உடைச்சு எங்கயோ போறது தெரியுது. தண்ணி மாறின வெங்காயப் பாத்தி யளப் பாக்க ஆசையாய் இருந்தது. காகங்கள் வாய்க்கால்ல குளிக்கப் படையெடுத்திச்சினம். கிட்டப்போய்க் கலைச்சுவிட்டேன். தண்ணி தெறிக்க சிறகை விரிச்சுக்கொண்டு அவை பறந்திச்சினம். காகங்கள் நீரை வரைந்துகொண்டே செல்கின்றன என்று எனக்குத் தோன்றும்.*

**ஈ)**

*நீரின்றி அமையாது உலகு என்பார் வள்ளுவர். நீரின்றி நினைவுகளும் இருப்பதில்லை. அவை உண்டாக்கும் நினைவுகள் மனசில் ஈரத்தை ஏற்படுத்தி விடுகின்றன. நீரைக் கண்டால் ஓடும் விசர்நாய்களைப் போல் எங்களால் இருக்க முடிவதில்லை. ஆனால் நீரின் அருமையையும் எங்களால் உணரமுடிவதில்லை. உப்புக் கரித்துவிடும் நீரும், இரசாயனங்களால் விசமாகிவரும் நீரும் எங்கள் நீர்நினைவுகளைப் போத்தலுக்குள் அடைத்து விலையாக்கி விடு கின்றன. மழைநீர்த்தொட்டிகள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப் பட்டபோது அந்தத் தொட்டிநீரைக் குடித்த போது அமிர்தம் போல இருந்தது. மழை பெய்யும் நாள்களில் நனைந்த படி வாயை ஆவென்றபடி மழைநீரைக் குடித்துவிடும் பரவசம் பிறக்கிறது.*

# சதிபதி = சரிநிகர்

**அ)**

**2015**

அந்தப் பிள்ளையார் கோவிலுக்கு முன் றோட்டால வரயிக்கைதான் அந்தத் தோட்டத்து வாய்க்கால்ல இருந்து திடீரென்று பறந்துவந்த கொக்கு என்ரை மோட்டர்ச் சைக்கிள் ஹெட்டில மோதித் துடிச்சு நடுறோட்டில விழுந்துது. வேலைக்கு நேரம் போச்சு எண்டு பறந்தடிச்சுக் கொண்டு வந்த எனக்கு, இந்தச் சம்பவம் மனசெல்லாம் கீறிப்போட்டுது. ஆனா அது சாகயில்லை. இன்னொரு கொக்கு (அதின்ரை துணை போலத்தான் கிடக்கு) அதுக் கருகில் பதிந்து பாதுகாப்பு வழங்க, அது ஒரு மாதிரிக் காலை இழுத்து றோட்டைத் தாண்டியது. ஓடுமீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி யிருக்குமாம் என்று தான் அறிந்திருக் கிறேன். எனக்காகவே இந்தக்கொக்கு காத்திருந்து வந்து விட்டதே என்று எனக்குக் கவலையாக இருந்தது. அது சாகக் கூடாது என்று நினைச்சுக் கொண்டு மோட்டர்ச்சைக்கிளை எடுத்தேன். அந்தறோட்டின் முடக்கைத் தாண்ட இன்னொரு சம்பவம் எனக்காகக் காத்திருந்தது. ஒரு அம்மாவின் கையில் கொங்கீறீட் கல். மழையில நனைஞ்சு ஒடுங்கிப் போய் நிற்கும் நாயைப் போல பதுங்கிப் போய் நின்றார் ஒருவர். அவவின் புருஷன் என்று நினைக்கிறன். அந்தக் கல்லைப் பிடுங்குறதுக்கு அவர் முயற்சித்தார். கண்ணகி கையில சிலம்பு இருந்ததைப் போல அவவின் கையில் கல் இருந்தது. அது எதற்கான நீதிப் போராட்டம் என்று விளங்கவில்லை. இரண்டு பேரும் பஸ்ஸிற்காக வீட்டில் இருந்து வரும்போதே இருந்த கொளுவல் முத்தியிருக் கோணும் போல கிடக்கு. சனம் சுத்தி நிண்டுது. கல்லைப் பறிக்கவும் இல்லை. ஏன் என்று கேட்கவும் இல்லை.

நானும் வேடிக்கைதான் பார்த்தேன். நீ யார் என்று அவர் களே கேட்டு விட்டால்? ஆனையை அடக்கிய அரியாத்தையாக ஆணை அடக்கியபடி நின்றார் அந்த அம்மணி. சனமும் அடக்கிய படி (சிரிப்பையும்) பார்த்துக்கொண்டிருந்தது. நான் அதில ஒருநிமிசம் தான் நிண்டிருப்பன். மோட்டர்ச்சைக்கிள் விரைந்தது.

**ஆ)**

***1997***

எங்கன்ரை வீட்ட பங்கர் இருக்கேல்ல. முதல்ல கிண்டின பங்கருக்குள்ள மாடுவிழுந்து செத்துப்போச்சு. அது கன்றுத்தாச்சி மாடு. அதைத் தூக்க முடியாமல் அப்பாவும் நானும் சேர்ந்து அதை அப்பிடியே மூடிப்போட்டம். பங்கர் கிண்டிறதுக்கு வேற இடம் இல்லாத தால கனகுமாமி வீட்டு பங்கருக்குத்தான் நாங்கள் ஓடிப் போவம். அவவின்ரை வீடு எங்கன்ரை பக்கத்துவீடு. அன்றைக்குச் செல்லடியோ பிளேனோ இல்லை. சும்மா இருந்து நானும் தங்கச்சி யளும் அவவோட தனகித் தனகிக் கதைச்சுக்கொண்டு இருந்தம். அப்பேக்கைதான் பாக்கியக்கா ஓடிவந்தா. எங்களோட கதைக்காமல், பங்கருக்குள்ள ஓடி ஒளிச்சா. கொஞ்சநேரத்தால தறுமண்ண சைக்கிள்ள அரக்கப் பரக்க வந்தார். இவள் இங்க வந்தவளோ என்று வீட்டை ஸ்கான் பண்ணிப் பாத்துக்கொண்டே கேட்டார். கனகுமாமி இல்லை எண்டதும் ஆள் சைக்கிள்ள எடுக்கேக்கையே பெரிசாச் சத்தம் போட்டுக்கொண்டு எடுத்தார். செல்லுக்குப் பயந்து நாங்கள் ஒளிக்கிற மாதிரி அவற்ற சொல்லுக்கும் அடிக்கும் பயந்து ஒளிச்சுப் போட்டு பாக்கியக்கா எட்டிப் பாத்தபடி வந்தா. ஒருக்கா உலக்கையால கூட அடிச்சவராம். அவன் ஒரு உலக்கையன் எண்டும் கனகு மாமி புறுபுறுப்பா. நராங்கிப் போன தோற்றம். தேரை விழுந்தா ஆக்கள் தேயிற மாதிரி தறுமரைக் கட்டின காலத்தில இருந்து இவள் உப்பிடித்தான் என்று கனகுமாமி சொல்லிக் கவலைப்படுவா. ஆனா அவக்கு ஆறு பிள்ளையள். சண்டை சமாதானம் பெண்டில் பெறு மாதம் என்று கனகுமாமி அவவுக்குச் சொல்லி நக்கலடிக்கிறதையும் அதைக் கேட்டு அழுத மூஞ்சியல ஒரு வெட்கச்சிரிப்பு நெளியிறதையும் பாக்க எங்களுக்கு அது ஒழுங்கா விளங்காமலே சிரிப்பு வரும். ஆனாக் குடியாலயே தறுமண்ண செத்தபிறகு பாக்கியக்கா அழுத அழுகையைப் பாக்கோணும். அந்த அழுகைச் சத்தத்தைத் தாங்க முடியாமல் நான் கனகுமாமி வீட்டு பங்கருக்குள்ள கனநேரம் ஒளிச்சு இருந்தனான்.

இ)

*2006*

*பாதை பூட்டின பிறகு கம்பசும் கனமாசமா நடக்கேல்ல. அப்பேக்கை நான் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தில வேலை செஞ்சனான். அங்க ஒருவர் அலுவலகப் பணியாளரா வேலை செஞ்சவர். காலமை ஏழரைக்கு வந்து முத்தம் கூட்டி அலுவலகம் எல்லாம் கூட்டி பாத்றூமையும் கிளீன் பண்ணி பத்துமணிக்கும் மூன்று மணிக்கும் எல்லோருக்கும் ரீ தந்து, வங்கிக்கும், சொல்லிற வேலைக்கும் எண்டு வெளியில ஓடித் திரிஞ்சு எல்லா வேலையும் அவர் தான் செய்வார். ஒரு நாள் அவருக்கு எங்கட பொஸ் பேசிக் கொண்டு நின்றார். "ஏன் உன்ரை மனிசிக்கு உப்பிடி அடிச்சனி, அடிச்சாத்தான் ஆம்பிளையோ?" எண்டு பேசிக்கொண்டு நின்றார். எல்லாற்ற காதும் அங்கதான் இருந்தது. இங்க எல்லா வேலையையும் செய்யிறவர், வீட்டில தும்புத்தடி கூட தூக்க மாட்டாராம். அவர் ஆம்பிளையாம் வீட்டு வேலையெல்லாம் பொம்பிளைதான் செய்யோணுமாம் ஏதோ எதிர்த்துக் கதைச்சதுக்குத்தான் அடிச்சிருக்கிறார். எனக்கு அவரை நினைச்சுப் பாக்க இப்ப சிரிப்பாக் கிடக்கு. வேலைகளைப் பகிர்ந்து செய்வதில் உள்ள திருப்தி அலாதியானது. ஆர் ஆரோ சொல்லி வைத்த கருத்துகள் எங்கன்ரை மூளையுக்கை ஆணிமாதிரி அறைஞ்சுபோய்க் கிடக்கு. அந்த ஆணியில தொங்கிற ஆதிக்கத்துக்கு மாலைபோட்டு அடக்கம் செய்யாமல் கூர் பார்த்துக்கொண்டிருந்தா என்ன பிரயோசனம்? எல்லோரும் மனிதர் என்று நினைச்சிட்டா என்ன வில்லங்கம் வந்திடும். அந்தாளை இப்ப காணுறதில்ல. கண்டா அவரோட கனக்கக் கதைக்கோணும் போல கிடக்கு.*

ஈ)

*ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு மிக அற்புதமானது. அதில் ஊடல் என்ற ஒன்று இடைக்கிடை நிகழத்தான் செய்யும். ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின் என்பது வள்ளுவர் கருத்து. இலங்கையர்கோனின் வெள்ளிப் பாதரசம் சிறுகதை பலருக்கும் உடனே ஞாபகம் வந்துவிடும். ஊடல் சாப் பாட்டில இருக்கிற உப்பு மாதிரி. அதிலும் ஒரு சுவை இருக்கவே செய்யும். அதற்காக உப்பைக் கோப்பையிலே கொட்டிச் சாப்பிட்டுக் கொண்டி ருக்க முடியுமா? (உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது மிக்கற்றால் நீள விடல்.) புரிந்துணர்வு இல்லா உறவுகளின் சேர்க்கை கொலையில் தற்கொலையில் விவாகரத்தில் அவமானத்தில் முடிவதை இன்று நாளும் நாளும் அறிகிறோம். உடலில் உள்ள ஈர்ப்பும் கவர்ச்சியுமா*

வாழ்க்கை? ஏதோ ஒரு புள்ளியில் மனம் இணையும்.

சமனான முச்சையிலே தான் வாழ்க்கைப்பட்டம் ஏற முடியும். பட்டம் ஆடலாம். விண்கூவலாம். ஆனால் அறுந்து விடலாமா? விட்டுக்கொடுப்பில் இருக்கும் மனநிறைவு ஒரு புதையல் அல்லவா?

# அவரவர் பார்வை அவரவர் கோணம்

**அ)**

*2010*

*அது மெரினாக்கடற்கரை. பரந்த அந்தக்கடற்கரை யில் நிற்கும் போது சனமும் சமுத்திரமாகி அலையாகிக் கொண்டிருந்தது. நானும் இன்னும் இரண்டு நண்பர்களும் அலையானோம். எனக்கும் நண்பர் ஒருவருக்கும் அப்போது தான் மெரினா அறிமுகமாகிறாள். எம்.ஜி.ஆர் சமாதியில் இருந்து நடிகர்களின் உருவங்கள், கிளி ஜோதிடம் சின்னச் சின்னக் கடைகள், பிரமாண்டமான கடைத்தொகுதி என்று ஒரு இடமும் விடாமல் திரிந்தோம். இருட்டுப்படத் தொடங்கியிருந்தது. நாம் அங்கு புது மனிதர்கள் என்பதை நான் முற்றிலும் மறந்திருந்தேன். வேறொரு உலகத்தின் சஞ்சார அனுபவத்தில் திளைத்திருந்தேன். மணலில் திளைக்கும் கால்கள், தூரத்தை மறந்திருந்த மனம், அப்போதுதான் எங்கள் இரண்டு பேரையும் கூட்டிவந்தவர் “ பின்னுக்கு அதுகள் வருதுகள் வேளைக்கு ஓடுங்கோ . உது களட்டை அகப்பட்டா கட்டிப்பிடிச்சு என்ன செய்யுங் களோ தெரியாது” என்று பதட்டப்பட்டு, பயந்து மணல் தெறிக்க ஓடத் தொடங்கினார். எனக்கும் நண்பருக்கும் என்ன செய்வதென்றெ தெரியவில்லை. மூளையின் சுடர்கள் திடீரென அணைந்து இருள் ஒன்று கண் மடல்களைக் கவ்வி உச்சந் தலையை விறைக்கச் செய்தது. திரும்பிப்பார்த்தேன். சற்று விகாரம் தென்படும் திருநங்கைகள் எங்களைப் பிடிப்பது போன்ற வேகத்தில் வந்து கொண்டி ருந்தார்கள். பாலியல் வியாபாரத்தில் தவிர்க்க முடியாமல் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று சில வாசிப்புகளில் அறிந்திருந்த நான், என் அறிவின்றி ஓடத்தொடங்கினேன்.*

மணல் தெறிக்க மனம் தெறிக்க ஒரு மரண ஓட்டம். மூச்சிரைத்தது. ஒரு ஆட்டோவில் ஏறி அறைக்கு வந்து சேர்ந்தோம்.

ஆனால் உண்மை அப்படியா இருந்திருக்கும்? அவர்கள் பற்றிய சோகக்கதைகள். அவர்களுடைய போராட்டங்கள் பற்றி திடீரென மூளை சுனைக்கத்தொடங்கிய போது குற்றவுணர்வு குறு வாளாகி என் மனச்சாட்சியோடு போராடத் தொடங்கியது.

**ஆ)**

*2008*

எனக்கு நெஞ்சில் ஒருவிதப் பய உணர்வு. பதட்டம் கைகால்களில் எல்லாம் ஏறிக் கூத்தாடத் தொடங்கியது, எங்கயும் தனியப் போய் அழோணும் மாதிரிக் கிடந்தது. முன் ஏற் பாட்டுடன் ஹோலில் படுப்பதாய் முடிவெடுத்து, மிச்ச எல்லோரையும் அறைகளுக்குள் அனுப்பியிருந்தேன். பக்கத்து விறாந்தை லைற்றுகள் இரண்டையும் ஹோலுக்கு வெளிச்சம் விழும்படி செய்து கொண்டேன். அவர் படுத்த பிறகு, நல்ல தூரத்தில் பாயைப் போட்டுப் படுத்தேன். ஏன் உந்தத் தூரம்? என்றார். நான் ஒன்றும் சொல்லவில்லை. கிட்ட வாருமன் கதைக்கலாம் என்றார். நான் நித்திரை போல நடிக்கத் தொடங்கினேன். என்னில் அவரின் கைகள் பட்டுவிடுகிறதோ என்ற பிரமையுடன் கண்ணை மூடிப்படுத் திருந்தேன். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நான் பயத்தில் நித்திரை கொள்ளவும் இல்லை. விடிந்ததும் நான் அவருடைய முகத்தைப் பார்க்கவே விரும்பவில்லை. அவரை அனுப்புவதிலேயே குறி யானேன். அம்மா எனக்குத் தெரிந்தவர் என்று புட்டு, முட்டைப் பொரியல் என்று எல்லாம் தயாராக்கியிருந்தார். கே.கே.எஸ் வீதியால் பஸ் போய்க்கொண்டிருந்த போது தான், எனக்குப் பக்கத்து சீற்றில் அவர் அறிமுகமானார். இருந்த இரண்டாம் நிமிடமே தம்பி எந்த இடம்? என்ன செய்யிறியள்? என்று கேட்கத் தொடங்கி, நீங்கள் என்ன நம்பர்? டேற் ஒப் பேர்த் என்ன? என்று சாத்திரம் சொல்லத் தொடங்க, அவர் பேச்சோடு நான் கலக்கத் தொடங்கி, என்ன பூர்வீகம் சொல்லத் தொடங்கினேன். என் நம்பரின் சிறப்புகளை எடுத்து விசிற விசிற, நான் சீற்றுக்கு மேலால் அந்தரநிலையில் வானின் மேற்பகுதியைத் தட்டி விடும் நிலையில் இருந்தேன். என் முகவரி கூட வாங்கிக் கொண்டார். இறங்கிவிட்டோம். ஒருநாள் கம்பசுக்குத் தேடிவந்த போதுதான் பலரும் என்னை எச்சரிக்கத் தொடங்கினார் கள். மச்சான் ஆள் “கல்”லடா. ஆளோட நீ எப்படி? என்று

நக்கல்வேறு நாக்குகளில் அமர்ந்து கொண்டது, ஆள் நேற்றுப் பின்னேரம் வீட்ட வந்து நின்றபோது ஏங்கிப் போனன். இப்ப இவரை பஸ் ஏத்திப் போட்டுத் தான் மறுவேலை என்று காலைமையே கொண்டுபோய் பஸ்ஸிற்கு விட்டிட்டு வந்திட்டன். இறக்கிப் போட்டு வந்துதான் யோசிச்சன், ஆள் என்னோட தப்பா ஒரு வார்த்தை கூடக் கதைக்கேல்ல.

**இ) 2001**

அவர் நடுங்கிப்போய் இருந்தார். முதுமையின் கொடுக்கில் இருந்த அவர் கண்கள் அந்தரப்பட்டு நீரைப் பொழிந்தன. கன்னத்துப் பள்ளங்களின் சுருக்கங்களும் அவரின் அந்தரித்த நிலையும் என்னுள் பரிதாபத்தை ஏற்படுத்தின. அங்கு பார்வைக்கு நின்ற சிலர் நக்கல்ச் சிரிப்புச் சிரித்துக் கடந்து சென்றார்கள். சிலர் பரிதாபமாகக் கதை கேட்பது போல் நடித்தார்கள். “உவன் என்ரை மேனைப் போல. என்னை வந்து கட்டிப் பிடிச்சுச் சாரத்தை உரியப் பார்த்தானே” என்று மீண்டும் மீண்டும் அவர் புலம்பினார். அது தெல்லிப்பளை மனநலவிடுதி. என் உறவினருடன் நிற்பதற்காக நானும் நான்கு நாட்கள் நின்றேன். அப்போதுதான் இது நடந்தது. அவற்ற பெடியள் இரண்டு பேரும் இயக்கத்துக்குப் போய்ச் செத்தபிறகு, மனிசிக்காரி யும் அந்த யோசினையிலேயெ செத்துப் போச்சு, இவருக்கு அதுக்குப் பிறகுதான் பிரமை ஒரு பேயாக உறைந்துகொண்டது. சத்தம் போடுறதோ, ஆட்களுக்கு அடிச்சு வெருட்டுறதோ இல்லை. பேரமைதி மட்டும் தான் கடைசியா கிணத்துக்க போய் விழுந்த பிறகு தான் இங்க கொண்டந்துவிட்டிருக்காங்கள். உள்ளம் இல்லாட்டிலும் உசிராவது மிஞ்சட்டும் என்று நினைச்சார்கள். இங்க வந்த இடத்தில தான் மனநலம் பாதிக்கபட்ட ஒருவருக்கு காவலா வந்த ஒருவன் இரவில இப்படிச் செய்து போட்டான். அவனை ஆஸ்பத்திரியை விட்டே கலைச்சுப் போட்டாங்கள். “அவன் என்ரை மேன் மாதிரி ஏன் இப்படிச் செய்தவன்?“ என்று அவர் சொல்லிக்கொண்டே இருந்தார்.

சிலர் கரம்போட் விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிலர் சுத்தியிருந்து கதைச்சுக்கொண்டிருந்தார்கள். சிலர் அப்படியே உறைந்து போயிருந்தார்கள். பின்னேரம் பொலிபோல் விளை யாடுறதுக்கு ஒரு ரீம் றெடியாகத் தொடங்கியது. நானும் அதில் சேர்வதற்காக எழும்பினன்.

௬)

ஒருபால் உறவு, மூன்றாம் பாலினம் என்பன எம்முடைய சமூகத்தைப் பொறுத்தவரையில் அருவருப்பிற்கும் புறக் கணிப் பிற்கும் கேலிக்கும் உரிய விடயங்களாகவே காலம்கால மாகக் கணிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை முறையும், சூழமைவும் உந்தப்படும் தேவைகளும் மனிதர்களை அகப்பட வைத்துவிடுகின்றன, அகப்படுத்தி விடுகின்றன. ஒவ்வொரு பக்கத்திருந்து பார்க்கும்போதும் அவரவர் பக்கம் நியாயம் இருப்பதாகவே தோன்றும். ஆனால் சில இடங்களில் பார்வையின் கோணங்களைப் பொறுத்து நியாயங்கள் அநீதிகளாக வும் அநீதிகள் நியாயங்களாகவும் மாறுவதுண்டு.



அஜந்தகுமாரின் 'இனிப்புக் கதைகள்' உண்மையில் இனிப்புக் கதைகள் தான். இத் தொகுப்பிலுள்ள பதின்நான்கு தலைப்புகளில் ஒன்று 'இனிப்புக் கதைகள்' என்று இருந்தாலும் மற்றவையும் இனிப்புக் கதைகள் தான். ஒவ்வொரு தலைப்பின் கீழும் நான்கு நான்கு பகுதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்பிலும் முதல் மூன்று பகுதிகள் அவரின் வாழ்வு அனுபவங்களைப் பேசுவனவாகவும், நான்காவது பகுதி அவ்அனுபவங்களின் படிப்பினைகளை அலசுவதாகவும் உள்ளன. இந்த வகையில் இவரின் இந்த பதிவுகள், தமிழிலக்கியத்தின் புதிய வடிவம் அல்லது புதிய உத்தி என்று கூறலாம். பொது வாக ஒரு படைப்பில், அந்தப் படைப்பினூடான படிப்பனை வெளிப்படையாகத் துருத்திக் காணப்படுமானால், அப்படைப்பை சிறந்த கலைப்படைப்பெனக் கூற முடியாதென்பார்கள். ஆனால் அஜந்தகுமாரின் இப்பதிவுகள், அவ்வவற்றின் நான்காவது பகுதியில் படிப்பினைகளை வெளிப்படையாக பேசுகின்றன; அலசுகின்றன. வாசிப்பவனிடத்து அனுபவத் தொற்றலை ஏற்படுத்துவதோடு, அதன் படிப்பனைகள் பற்றிய அலசல்களுக்கும் களம் அமைத்துக் கொடுக் கின்றன. வாசகன் தன் அனுபவங்கள் சார்ந்து சிந்திக்கவும், விழிப்புணர்வு பெறவும் வழி சமைக்கின்றன. அஜந்தகுமாரின் இப் பரிசோதனை முயற்சி மிகுந்த வரவேற்பிற்கும் பாராட்டுகளுக்கும் உரியதாகும்.

- குப்பிழான் ஐ. சண்முகன்

அஜந்தகுமார் சிறுகதை எழுத்தாளர், கவிஞர், தமிழியல் ஆய்வாளர், சிறு சஞ்சிகை ஆசிரியர், வசீகரிக்கும் பேச்சாளர் என்று பல்வேறு பரிமாணங்களில் அறியப்பட்டவர். படைப்பாக்கத்துறையிலும் ஆய்வுத்துறையிலும் தளராது தன் ஈடுபாட்டைக் காட்டிவருபவர். நவீன இலக்கியப் பயிற்சியும் நவீன இலக்கியங் கள் பற்றிய ஆய்வூக்கமும் மிஞ்சியவர். படைப்பாக்கத்துக்கான பிராந்திய மற்றும் தேசிய விருதுகளைப் பெற்றவர். குறிப்பிடத்தக்க ஆய்வு மாநாடுகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து தன்னை ஓர் ஆய்வாளனாக நிலை நிறுத்தியவர். ஒரு சோம்பேறியின் கடல், தனித்துத் தெரியும் திசை, அப்பாவின் சித்திரங்கள், நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன், படைப்பின் கதவுகள் போன்ற படைப்பாக்க மற்றும் ஆய்வு நூல்களைத் தந்தவர்.

- இ. இராஜேஸ்கண்ணன்

ISBN 955524963-6
9789555249638